Reg No. M. 3066. 1933. ஜூன் 1.

"PAHUTHARIVU"
(REASON)

மலர் 4. இதழ் 2.

பகுத்தறிவு

திங்கள் ஒன்றுக்கு இருமுறை வெளியீடு

தனிப்பிரதி
விலை அணா 0—1—6

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

கடவுள் என்பது கற்பனை (ஜீன மெஸ்லியர்)	3
உண்பதிலும் உடுப்பதிலும் மதமா? (கைவல்யம்)	11
ஹம்ஸ—சுந்திரம் (அருணோதயம்)	18
பூ தோற்றம் (ஆர். மெக்மிலன்)	25
மக்களுக்கு ஏற்ற உணவு (ஜார்ஜ் பெர்னாட்ஷா)	29
மரித்த சரீரம் பதப்படுத்தும் விதம் (எம். சிங்காரவேலு)	33
விஞ்ஞான உலகம்	38
கருநாக சங்கத்தின் மர்மங்கள்	41
மின்சாரம்	46
சீன மாதர்கள்	50
துரோகிகள் யார்? (சோ. ஜெயராமுலு)	54
தாவரங்களில் மின்சாரம்	62

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 4. } ஈரோடு 1938 ஜுன் 1. { இதழ் 2.

தீண்டாமை ஒழிப்பு.

கே. எஸ். அருணகிரிநாதன்

('காக்ஷி கண் காக்ஷியே' என்ற மெட்டு.)

பல்லவி

வேண்டாம் தீண்டாமையே
விட்டு விடுங்களினி (வேண்டாம்)

அநுபல்லவி

வேதனையைக் கொடுக்கும்
நீதந்தனைத் தடுக்கும் (வேண்டாம்)

சரணம்

ஆண்டவனுண்டாக்கியதும் ஆண் பெண்ணென்ற ஜாதியே
ஆதியாகமத்திற் சொல்லும் அந்தவுண்மை நீதியே
மூண்டவினைப் பார்ப்பனர்கள் மூடமந்திர மோதியே
முழும்படி தீவினையை மூட்டி விட்ட சேதியே

முற்றிலுங் கெடுத்து விட்டார் நாட்டை. நம்மை
மூடரெனச் செய்தார் பல கேட்டை. சற்றும்

குற்றமற்ற நம்மவரின் தேட்டை. அவர்
கொஞ்சங் கொஞ்சமாகக் கொண்டார் வேட்டை

குடி கெடுக்கும் சேட்டை
கொடுக்கும்பவ மூட்டை
முடிவிற்பல வோட்டை
மொழிவேனந்தப் பாட்டை (வேண்டாம்)

தன்னலம்பார்ப்பார் வகுத்தஜாதியெனுந் தொல்லையே
தாரணியில் மானிடர்க்குள் தாழ்வுயர்வு மில்லையே
உன்னதங்கொள் பார்ப்பனரும் யோனியின்றி வல்லையே
உண்மை தனைக் கேட்டாலவர் காட்டுவர்கள பல்லையே

உற்றவொரு ஜாதியுயர் வேது. அவை
உண்டென நினைப்பதுவுந் தீது. உண்மை
கற்றவாறிவாரவர் சூது. மோட்சம்
காட்டுதற்கு முன்வருவார் தூது.

கபடுடையோர்க் கேது
கருணைமொழி யேது
உபகிடத வாது
வொழிந்து வரும் போது (வேண்டாம்)

தெய்வபூஜை செய்வதற்கும் அய்யரொரு டாப்பரா
தேட்டமாய் நமக்கு முத்தி நாட்டிநலஞ் சேர்ப்பரா
ஐயோ அவர் நம்பணத்தை வாங்கிப்பவம் தீர்ப்பரா
அல்லது நம்மீது வரும் தொல்லை கண்டு மீட்பரா

அருணகிரி நாதனுரை நோக்கு, அவை
ஆற்றலுற்ற மாற்றுயர்ந்த வாக்கு. கொடும்
வறுமைப்பிணியதனைப் போக்கு சுய
மரியாதை யென்னுங் கொடி தூக்கு

மதியை ஸ்திர மாக்கு
மடமைதனைப் போக்கு
விதியை வெட்டித் தாக்கு
விடுதலையுண் டாக்கு (வேண்டா)

கடவுள் என்பது கற்பனை.

ஜீன் மெஸ்லியர்.

மதக்காரர்களெல்லோரும் இவ்விதமான சங்கடங்களிலிருந்து சுலபமாகத் தப்பிப்பதற்காக, கடவுள் என்ன என்பதைத்தெரிந்து கொள்ளவேண்டியதே அவசியமில்லென்று சொல்லி விடுகிறார்கள். நாம் தெரிந்து கொள்ளாமலே வணங்க வேண்டுமென்கிறார்கள். அவருடைய குணாதிசயங்களைப் பற்றி கவனிப்பது குறும்புத்தனம் என்றும், அவைகளைப்பற்றி கவனிப்பதற்கு நமக்கு எவ்வித அதிகாரமுமில்லையென்றும் சொல்லுகிறார்கள். அப்படியே அவரைத் தெரிந்துகொள்ளாமலே வணங்க வேண்டுமென்று வைத்துக்கொண்டாலும், அவர்இருப்பதைப் பற்றியாவது நாம் நிச்சயமாய் தெரிந்துகொள்ளவேண்டாமா? மேலும் அவரைப்பற்றி சொல்லப்படும் முரண்பாடான குணங்களெல்லாம் அவரிடம் பொருந்தியிருக்க முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்வதற்குமுன் அவர் இருப்பதைப் பற்றி எப்படி கூறமுடியும்? ஆகவே உண்மையைக் கூறவேண்டுமானால், கடவுளை வணங்குவதென்பது தன் மூளையின் கற்பனையை வணங்குவதேயாகும். அல்லது பூஜ்யத்தை வணங்குவதாகும்.

ஆகவே நாஸ்திகம்தான் சரி.

விஷயத்தை இன்னும் குழப்பத்தில் விடுவதற்காக ஆஸ்திகர்களெல்லாம் கடவுள் என்ன என்பதைப்பற்றி தாங்கள் ஒன்றும் சொல்லாமல் இருப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். ஆனால் அந்தக்கடவுள் எப்படி 'இல்லை' என்பதை மாத்திரம் நமக்குச் சொல்லுகிறார்கள். இவ்விதம் எதிர்மறைகளாலும், மனோகற்பிதங்களினாலும் சொல்லுகின்ற ஒன்றை உண்மையானதென்றும், பரிபூரணமானதென்றும் தாங்களாகவே நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் உண்மையில் இவ்விஷயம் அவர்களுடைய மனக்கற்பனையே யொழிய வேறில்லை என்பது நன்கு விளங்கும். ஒரு ஆத்மாவிற்கு தேகம் என்பது கிடையாது. எல்லையற்ற

தென்பது எல்லையுடையதாயிருக்க முடியாது. பரிபூரணம் என்று சொல்லப்படுவது பரிபூரணக் குறைவாய் இருக்க முடியாது. ஆகவே இவ்வளவு எண்ணிறைந்த குறைகளையுடைய ஒன்றைப் பற்றியாவது, விஷய சூன்யமாய் இருக்கும் ஒன்றைப்பற்றியாவது யாராவது ஒரு உண்மையான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கமுடியுமா என்பதை யோசித்துப்பாருங்கள். எது ஒன்று எண்ணத்தையே கடந்து நிற்கிறதோ அது சூன்யம் அல்லது பூஜ்யத்தைத் தவிர வேறேதாவது இருக்கமுடியுமா? மிகப் பெரிய கடவுளின் குணாதிசயங்களானது கேவலம் மனிதனுடைய புத்திக்கு எட்டாதது என்று சொல்லப்படுமேயானால் கடவுள் மனிதனுக்குச் சற்றும் பிரயோஜனமேயில்லையென்பது தானாகவே ஏற்பட்டு விடுகிறது. கடவுளானவர் எல்லையற்றவர் என்று கூறப்படுமேயானால் அவருக்கும், அவருடைய ஜீவன்களுக்கும் எந்த சம்பந்தமும் இருக்கமுடியாது என்பதை நாமே ஒப்புக்கொண்டு தீர வேண்டும். ஆகவே கடவுளை எல்லையற்றவர் என்று சொல்வதானது மனிதர்களுக்காக, அவரைக் கொன்றதாக ஆகும்! அல்லது குறைந்தபக்ஷம் மனிதர்களுக்கு அவரால் எவ்வித பலனுமில்லை என்றாவது ஏற்படும்.

கடவுள் மனிதனை அறிவுடையவனாகப் படைத்தான் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சகலமும் அறியக்கூடியவனாகப் படைக்கவில்லையே! அதாவது எல்லா விஷயங்களையும் உணரக்கூடியவனாகப் படைக்கவில்லையே. இதிலிருந்து ஏற்படுகிறது என்னவென்றால், கடவுளின் தத்துவத்தை உணர்ந்துகொள்ளவேண்டிய அறிவோடு மனிதனைப் படைப்பதற்குக் கடவுளால் முடியவில்லை யென்பதேயாகும். எனவே மனிதன் கடவுளை அறியும்படியாகச் செய்யும் சக்தியும் அவரிடமில்லை, அறியவேண்டுமென்ற விருப்பமுமில்லை என்பது ருசுவாகிறது. மனிதனுடைய தத்துவமானது கடவுளின் தத்துவத்தை உணர்ந்துகொள்ள முடியாத இயற்கையோடு அடைந்திருக்கும்போது மனிதர்களிடத்தில் கோபித்துக் கொள்வதற்கு கடவுளுக்கு என்ன நியாயம் இருக்கிறது? இயற்கையாகவே மனிதன் கடவுள் தத்துவத்தை உணர முடியாமலிருக்கும்போது அதற்காக நாஸ்திகர்களைக் கடவுள் தண்டிப்பதாயிருந்தால் அவர் ரொம்ப அநீதிவனாகவும், சகிக்க முடியாத கொடுங்கோலனாகவுமே இருக்கவேண்டும்.

நாஸ்திகம் குற்றமல்ல.

பெரும்பாலான பாமர மக்களுக்குப் பயம் என்பதைவிட மூடிவான தர்க்கங்கள் எதுவுமே கிடையாது. இந்தக் காரணத்தால் மதக்காரர்கள் எல்லோரும் நம்மை ஜாக்கிரதையான வழியிலேயே போகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நம்பாமலிருப்பதைவிடக் கொடுமையான காரியம் எதுவுமே இல்லை என்கிறார்கள். கடவுளிருப்பதைப்பற்றி சந்தேகப்படுகிறவர்களையெல்லாம் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் தண்டிப்பார் என்று சொல்லுகிறார்கள். அவர் அப்படிக் கொடூரமாய் நடத்துவது நியாயமென்கிறார்கள். நாஸ்திகர்களைப் பழிக்குப்பழி வாங்கும் ஒரு கோபமான அரசனுடைய செய்கையைப் பற்றிக் கேட்பதென்பது பைத்தியகாரத்தனமேயாகுமென்று சொல்லுகிறார்கள். இக்கூற்றுகளைப் பொறுமையாய் ஆராய்ந்து பார்ப்போமானால் எது ருசுப்படுத்த வேண்டுமோ அதே கற்பித்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்பது தெளிவாகும். கடவுளை நம்புவதுதான் சௌகரியம். சந்தேகத்திலோ, அல்லது மறுத்தாலோ ஆபத்துண்டாகுமென்று நம்மிடம் சொல்வதற்கு முந்தி, முதலாவதாக அவ்விதம் சொல்பவர்கள் நாம் திருப்திப்படும் வரையில் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதை ருசுப்படுத்தவேண்டியது அவசியமாகும். பிறகு மனிதன் தன்னுடைய விசேஷ அறிவினால் கூட அறிந்துகொள்ள முடியாமலிருக்கும் ஒரு பைத்தியமான நிலைமையிலிருப்பதற்காக அவனைக் கடவுள் தண்டிப்பது நியாயந்தான் என்பதை ருசுப்படுத்த வேண்டும். அதாவது, சுருங்கக் கூறவேண்டுமானால் நியாயமே உருவமாக இருப்பதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், கடவுள் தத்துவமென்பதை அறியவே முடியாத அவசியத்திலிருக்கும் மனிதனைக் கொடுமையாகத் தண்டிப்பதின் நியாயத்தை ருசுப்படுத்த வேண்டும். ஆஹா! மதக்காரர்களின் தர்க்கம் எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது பாருங்கள்! அவர்களே சிலக் கட்டுக்கதைகளைக் கட்டிவிடுகிறார்கள்; பிறகு முன்னுக்குப் பின் முரணான விஷயங்களையும் அவைகளோடு பிணைத்து விடுகிறார்கள்; பிறகு தாங்களே கட்டிய புரட்டுகளை நம்பாமலிருக்கக்கூடாது என்று பயமுறுத்துகிறார்கள். இந்த முறைப்படி நடப்பதாயிருந்தால் எந்த அபத்தமான ஆபாசத்தையும் நம்பித்தானாகவேண்டும் என்பது ஏற்படும்.

உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் நாஸ்திகர்களேயாவார்கள்; ஏனெனில், கடவுளைப்பற்றி அவர்களுக்கு ஒன்

றுமே தெரியாது. ஆகவே, இதற்காக அவர்களைக் கெட்டவர்களென்றோ, பாவிகளென்றோ சொல்லமுடியுமா? அவர்கள் எந்த வயதில் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறார்கள்? பகுத்தறிவு வந்தவுடன் என்று நீங்கள் சொல்வீர்கள். இப்பகுத்தறிவு காலம் எப்போது ஆரம்பிக்கிறது? அறிய முடியாததென்று சொல்லப்படும் கடவுள் தத்துவத்தை ஆராய்வதில் மிக மேதாவிகளான மதக்காரர்கள் கூட தவித்துக்கொண்டிருக்கும்போது, பெண்கள், தொழிலாளர்கள் முதலிய ஜனத்தொகையின் பெரும்பாலான பாமர மக்கள் என்போர் அதைப்பற்றி என்னதான் தெரிந்துகொள்ள முடியும்?

கடவுள் நம்பிக்கை தொட்டிற் பழக்கமே.

கடவுளைப்பற்றி யாருக்கு ஒன்றுமே தெரியாதோ அவர்களுடைய வார்த்தையைக் கேட்டுத்தான் பிறரும் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறார்கள். நமது வளர்ப்புத்தாய்கள் தான் நமது கடவுள் உபாத்தியாயர்கள்; மனிதர்கள் ஓநாய், பிசாசு முதலியவைகளைப் பற்றிக்குழந்தைகளிடம் சொல்வதுபோலவே கடவுளைப்பற்றியும் குழந்தைகளிடம் சொல்லுகிறார்கள். பச்சிளம்பிராயத்திலிருந்தே இயந்திரம் மாதிரி இரண்டு கைகளையும் தாங்களாகவே சேர்க்கும்படி சொல்லிக்கொடுக்கிறார்கள். அப்படிச் சொல்லிக்கொடுக்கும் வளர்ப்புத் தாய்களுக்கே கடவுளைப்பற்றி அக்குழந்தைக்குத் தெரிந்ததைவிட சிறிதாவது விபரமாய்த் தெரியுமா?

கடவுள் என்பது ஒரு பரம்பரை வழக்கம்

ஒரு குடும்பத்தின் சொத்தும், அதன் பொறுப்பும் எப்படி ஒரு தகப்பனால் தன்னுடைய சந்ததியார்களுக்குக்கொடுக்கப்படுகிறதோ அதைப்போலவேதான் மதம் என்பது கொடுக்கப்படுகிறது. கடவுள் என்பதை ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லிக்கொடுக்காமலிருந்தால் உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்குக் கடவுள் என்றால் என்னவென்பதே தெரியாது. ஒவ்வொருவனும் தனது முன்னோர்களிடமிருந்து எந்தக் கடவுள் என்பதைப்பற்றித் தெரிந்துகொண்டானோ அதையே தான் தனது சந்ததியார்களுக்கும் சொல்லுகிறான். ஆனால் அவனுடைய இஷ்டத்திற்குத் தக்கபடி ஒவ்வொருவனும் அந்தக்கடவுளைத் திருத்தியும், புதுப்பித்தும் அழகுபடுத்தியும் சொல்லுகிறான்.

அதன் ஆரம்பகாலம்.

மனிதனுடைய மூளையானது முக்கியமாய் இளம்பிராயத்தில், ஒரு மிருதுவான மெழுகைப்போல் எந்த வழியிலும் திருப்பக்கூடியதாக இருக்கிறது. தானே யோசிக்கும் தன்மை வரக்கூடாத பருவத்தில் மனிதனுடைய அபிப்பிராயங்களையெல்லாம் உண்டு பண்ணுவது அவனுடைய கல்வியேயாகும். இதை யுணராமல் சிறிய வயதில் சரியாகவோ, தப்பாகவோ நமது மண்டைக்குள் புகுத்தப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் நமது பிறப்பிலேயே இயற்கையாக ஏற்படும் உணர்ச்சியென்று தப்பாக நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த மனப்பான்மைதான் நமது பிழைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறது.

அது பரவும் விதம்.

யார் நமக்குப் போதிக்கிறார்களோ அவர்களுடைய அபிப்பிராயங்களே நமக்குள் புகுத்தப்படுகின்றன. நம்மை விட அவர்களை அதிக புத்திசாலிகள் என்றே நாம் நம்புகிறோம். நமக்குக் கற்பிக்கப்படும் விஷயங்களை அவர்கள் பூரணமாய் அறிந்துகொண்டுவிட்டதாகவே நாம் நினைத்துக்கொள்ளுகிறோம். நமக்கு நாமே உதவி செய்துகொள்ள முடியாத பக்குவத்தில் அவர்கள் நம்மைப்பற்றிக் கவலை எடுத்து வந்ததனால் பிறகு நம்மை ஏமாற்றமாட்டார்கள் என்றே தீர்மானிக்கிறோம். இந்த எண்ணத்தினால்தான் ஆதாரவில்லாத ஆயிரக்கணக்கான தவறுகளைக் கண்மூடித்தனமாய்க் கையாள ஆரம்பிக்கிறோம். அவர்கள் சொல்வதைப்பற்றி ஆராய்ச்சி செய்யக்கூடாதென்று அவர்கள் சொல்லியிருந்துங்கூட அவர்கள் மீது நமக்கு நம்பிக்கைக் குறைவதில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு மரியாதை செய்கிறோம்.

பகுத்தறியமுடியாத காலத்தில் கற்பிக்கப்பட்டவை.

மனித சமூகமானது சரி எது, தப்பு எது என்றும், வலதுகை எது, இடதுகை எது என்றும் தெரிந்துகொள்ள முடியாத ஒரு பிராயத்திலேயே மதக்கொள்கைகளைப்பற்றி சொல்லிக்கொடுப்பதில் போதனைக்காரர்கள் சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். 40 வயதான ஒரு மனிதனுடைய

குணாதிசயங்களைத் திருத்துவதென்பது எவ்வளவு கஷ்டமான காரியமோ, அவ்வளவு கஷ்டந்தான் 40 வயதான மனிதன் தனது சிறு பிராயத்திலிருந்தே கடவுளைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை மாற்றுவதிலும் இருக்கிறது.

இயற்கை விநோதங்களுக்கும், கடவுளுக்கும் சம்பந்தமில்லை.

கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதற்கும், அந்த உண்மையை நிரூபிப்பதற்கும் இயற்கை விநோதங்களே அத்தாட்சியாகும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நான் கேட்பதொன்று. இயற்கையைப்பற்றி நினைக்கவும் அதனுடைய வளர்ச்சியைப்பற்றி ஆலோசிக்கவும் இவ்வுலகில் எத்தனை பேருக்கு அவகாசமும், சாமர்த்தியமும், போதிய பிரியமும் இருக்கிறது என்று கேட்கிறேன்? உலகத்திலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வியற்கையைப் பற்றிய கவலையே கிடையாது, ஒரு குடியானவன் தான் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிற சூரியனுடைய அழகைப்பார்த்து மனங்கசிவதில்லை. ஒரு கப்பலோட்டியானவன் சமுத்திர அலைகளின் அசைவுகளைப்பார்த்து ஆச்சரியப்படுவதில்லை. அவனுக்கு அதிலிருந்து மத சம்பந்தமான தத்துவார்த்தங்கள் தோன்றுவதுமில்லை. இயற்கை விநோதங்களுக்குக் காரணம் கூறமுடியாத ஏதோ சிலருக்குமாத்திரம் கடவுளின் சக்தி இயற்கை வழியாக அறியக்கூடியதாகத் தோன்றலாமேயொழிய, இயற்கையின் விசேஷங்களைக் கொண்டு கடவுளிருப்பதாக நிரூபித்துவிட முடியாது. நிதானமான மனப்பான்மையை யுடைய ஒரு தத்துவஞானிக்கு இயற்கையின் விநோதங்கள் ஒரு நிரந்தரமான சட்டங்களுக்குட்பட்டது என்று தோன்றுமேயொழிய, வேறு எவ்விதத் தத்துவமும் தோன்றாது. இயற்கை என்பது பல வேறான வஸ்துக்கள் பலவிதங்களாக ஒன்று சேர்வதின் பயனேயாகும் என்ற உண்மை அவனுக்குப் புலப்படும்.

இயற்கை விநோதங்களுக்குக் காரணம் உண்டு.

இவ்வியற்கை விநோதங்களிலிருந்து மனிதன் கற்றுக்கொள்ளவேண்டிய அரிய விஷயங்களும், அவைகளைத்தனது சௌகரியத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டிய

அவசியங்களும் இருக்க, அவைகளுக்குக் காரணமான ஒன்று, அறியமுடியாத ஒன்று, கற்பனையான ஒன்று இருப்பதாக நினைத்துக்கொள்வது எவ்வளவு பொருத்தமற்ற தர்க்கம் என்பதைப் பாருங்கள். நம்மால் அறியக்கூடிய ஒரு விஷயத்திற்கு நம்மால் அறியவே முடியாத ஒன்று கர்த்தா என்று சொல்வதானது எவ்வளவு அபத்தமானது என்பதை யோசித்துப்பாருங்கள், கடவுள் என்றால் என்ன? ஆவி அல்லது ஆத்மா என்றால் என்ன? நமக்கு ஒன்றுமே புலப்படாத நிலைமையைச் சொல்லக்கூடிய வார்த்தைகளாகும். ரிஷிகளே! குருமார்களே! உங்களுக்கொரு வார்த்தை. இயற்கையையும், அதன் காரண காரியங்களையும் பற்றி சிந்தனை செய்யுங்கள், பிறகுதான் அதன் உண்மையை உணர்வீர்கள். அவ்வாறு உணர்ந்துகொண்டபின் இயற்கைக்கு மாறான கட்டுக்கதைகளைப் போன்ற அபிப்பிராயங்களைத் தேடி அலையாதீர்கள். ஏனெனில் அவ்வாறு செய்வதால் உங்கள் புத்தி விசாலப் படுவதற்கு மாறாக உங்களைநீங்களே அறிந்துகொள்ள முடியாமல் உங்களுடைய மூளைகளைச் சிக்கலில் கொண்டுபோய் புகுத்திவிடுகிறீர்கள்.

கடவுள் என்ற ஒன்றுஇல்லாமல் இயற்கைக்குக் காரணம் கூறமுடியாது என்கிறீர்கள். அதாவது உங்களுக்கு எதைப் பற்றி மிகச் சொற்பமாகத் தெரியுமோ அந்த ஒன்றை விளக்குவதற்காக, உங்களுக்கு ஒன்றுமே தெரியாத ஒன்றை (கடவுளை)க் காரணமாகக் காட்டுகிறீர்கள். எது ஒன்று விளங்காததாக இருக்கிறதோ அதை இன்னும் விளங்காத ஒன்றைக்கொண்டு விளக்கிவிடுவதாகப் பாசாங்கு செய்கிறீர்கள். ஒரு முடிச்சின்மேல் இன்னும் பல முடிச்சுகள் போட்டு அதை அவிழ்த்துவிட்டதாகக் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். மிகத் தீவிரமான தத்துவ ஞானிகளே! கடவுளிருப்பதாக நிரூபிக்க வேண்டுமானால் தாவரநூலிலுள்ள விஷயங்களைக் காப்பியடியுங்கள்; மனிதஉடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவைப் பற்றியும் சோதனை செய்து அறிந்துகொள்ளுங்கள். ஆகாயத்தில் பறந்துபோய் நட்சத்திரங்களின் சுழல்களைக் கணக்கெடுங்கள், பிறகு கீழே பூமிக்கு வந்து தண்ணீர் ஓடும் முறைகளைக் கவனித்து அறியுங்கள். அதன் பிறகு வண்ணாத்திப் பூச்சிகள், புழுக்கள் நீர் ஜந்துக்கள், அணுக்கள்முதலிய எல்லாவற்றிலுமுங்களுடைய கடவுளரின் பெருமை தெரிவதைப்பற்றி சாங்கோபாங்கமாகப்

பிரசங்கிக்கலாம். இவைகளெல்லாம் உங்கள் கடவுள் இருப்பதாக ருசுப்படுத்திவிட முடியாது. ஆனால் இவைகள் எதை ருசுப்படுத்துமென்றால் இயற்கையிலுள்ள அணுக்கள் பலவிதங்களாகச் சேரும் குறை, அதன் காரண காரியங்கள் முதலியவைகளைப் பற்றி உங்களுக்கு ஒரு இழவுமே தெரியாது என்பதைத்தான் ருசுப்படுத்தும். இன்னும் இயற்கையை நீ அலட்சியப் படுத்திவிட்டாய் என்பது விளங்கும். தூர திருஷ்டிக் கண்ணாடிக்குக்கூட புலப்படாத பல அணுக்களும், ஜந்துக்களும் இருக்கின்றன என்ற ஒரு விஷயமே உனக்குப் புலப்படவில்லை என்பது தானாய் விளங்கும். கடைசியாக ஸ்பரிசிக்கக்கூடியதும், உணரக்கூடியதுமான பலவிஷயங்களை உனது புத்தியானது உணர்ந்துகொள்ள முடியாமல், தெரியாத ஒரு உலகத்தில் உன் அறிவுக்கு எக்காலும் புலனாகாத ஒன்று தன்லவனாக இருப்பதாக நீ சொல்லிக்கொள்வதானது, உனக்கு ரொம்ப லகுவாக இருக்கிறது என்கிற குட்டு தான் இதனால் வெளிப்படுகிறது.

உலகம் ஒருவராலும் படைக்கப் படவில்லை.

காரணமில்லாமல் காரியமுண்டாகாது என்று மதக்காரர்களெல்லோரும் வெகு சிரத்தையோடு கூறுகிறார்கள். உலகம் தானாகவே உண்டாகவில்லையென்று அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் நான் சொல்வதென்னவெனில், உலகம் என்பது காரணமே ஒழிய காரியமல்ல. இது ஒருவராலும் செய்யப்படவில்லை. ஏனெனில் இதைச்செய்ய எவராலும் முடியாது. உலகம் எப்போதுமே இருந்துகொண்டேதானிருக்கிறது. அது இருக்கவேண்டிய அவசியமும் இருக்கிறது அதற்குக்காரணம் அதுவேதான். இயற்கையானது நம் கண்ணெதிரில் சதா அசைந்துகொண்டும், உற்பத்தியாகிக் கொண்டும் இருப்பதுமே அதன் தத்துவமாகும். ஆகையால் அதை நடத்துவதற்குக்கண்ணுக்குத்தெரியாதஒரு சக்தி வேண்டிய அவசியமேயில்லை. ஜட பதார்த்தமானது தன்னுடைய சக்தியைக் கொண்டும், வேறுபாட்டின் காரணத்தினாலும் அசைகிறது, அதனுடைய பலவிதமான அசைவுகளுக்குக் காரணம் அதனிடமிருக்கும் பலவிதமான சத்துக்களேயாகும். ஒவ்வொரு ஜீவனைப் பற்றியும் நமக்கிருக்கும் வித்தியாசமான உணர்ச்சியாலும் அதன் தனுடைய வித்தியாசமான அசைவுகளாலுமே, நாம் ஒரு ஜீவனுக்கும், மற்றொன்றுக்கும் இருக்கும் வித்தியாசத்தை உணர்கிறோம்.

உண்பதிலும், உடுப்பதிலும் மதமா?

(கைவல்யம்)

உலகில் வெவ்வேறு பாகங்களிலுள்ள ஆடம்பரங்களையும், சுகங்களையும் பெறுவதற்காக மேல் நாட்டினர் புதிய உபாயங்களையும் வழிகளையும் கண்டுபிடித்துக்கொண்டே வருகிறார்கள். நாமோ ஒரே பாதையில் நடந்துகொண்டிருக்கிறோம். நூதனமாகவும், புதியதாகவும் எதையேனும் கண்டுபிடிப்பதற்கு நாம் முயற்சி செய்வதேயில்லை. நூதன சக்தியென்பது எவ்விதமாகவோ நம்மிடத்தினின்று போயே விட்டது நமது ஜன சமூகத்தில் பெரும் பகுதி ஆகாரத்திற்காக அழுது கொண்டும், பட்டினியால் மரித்துக்கொண்டும் இருக்கிறது. மற்ற பகுதி இன்ன ஆகாரத்தைத் தொடலாம், இன்னவை தீட்டு, இவர்களிடம் தான் உண்ணலாம் என்பதில் அந்தஸ்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது. இவையனைத்தும் நம்முடைய குற்றமே. இந்தக்

இயற்கையிலுள்ள ஒவ்வொன்றும் சதா அசைந்து கொண்டே இருப்பதை நீ உன் முன் பார்க்கிறாய்; ஆனால் இயற்கைக்கு சுய உணர்ச்சி யில்லையென்று பாசாங்கு செய்கிறாய்! பிறகு இயற்கையை நடத்துவதற்குப் பிரத்தியேகமான சக்தி வேண்டுமென்றும் நம்புகிறாய்! ரொம்ப சரி! இந்தப் பிரத்தியேக சக்தி யென்பது யார்? அது தான் ஒரு ஆத்மா; அதாவது, ஒன்றுமே விளங்காத முரண்பட்ட அபிப்பிராயங்களைக் கொண்ட ஒரு ஜீவன். ஆகவே, நான் சொல்வதென்னவெனில் ஜடபதார்த்தம் என்பது தானே அசைகிறது. ஆகையால் அதை அசைப்பதற்கு ஒரு பிரத்தியேகமான சக்தி அவசியமே இல்லை என்பதே நியாயமாகும். உன் மனது கண்ட இடங்களிலெல்லாம் சுற்றித்திரிவதைத் திருப்பிக் கொண்டுவா. கற்பனையான உலகத்திலிருந்து உண்மையான உலகத்திற்குவா காரண காரியங்களை அறிந்துகொள். "முழு முதற்காரணம்" என்று சொல்வதை மதக்காரர்களுக்கே விட்டுவிடு.

கஷ்டத்தினின்றும் நிவர்த்தியடைவதற்குள்ள மார்க்கம் எதையேனும் கண்டுபிடிப்பதற்கு நாம் யோசிப்பதேயில்லை. ஆனால் நமது ஊத்த பெரும் பேச்சினாலே சத்தத்தை மாத்திரம் இப்பொழுது உண்டாக்கியிருக்கிறோம். நாம் மூலையிலிருந்து வெளியே வந்து வெளியே உலகமானது எப்படிச் சலிக்கின்றது. என்பதைப்பார்க்க பயப்படுகிறோம். வெளியே வந்து உலகத்தைப்பார்த்தால் அப்பொழுது மனமானது திறந்து கொடுக்கும். ஆலோசனா சக்தி தானே உண்டாகும். அப்படியானால் நமக்கெல்லாம் ஒன்றுமட்டும் தன்மையுண்டாகி நம்மிலிருக்கும் அசூசைக் குணம் தானே விலகி விடும்.

எல்லா நாட்டிலும் அந்தஸ்து என்று ஒன்றுண்டு. அது உடையிலும், ஆகாரத்திலும் எந்நாட்டிலும் மலிந்து கிடப்பதுபோலவே நமது நாட்டில் முன்னிருந்தமாதிரியல்லாமல் இப்பொழுது வேறுமாதிரியாகப் பரவிக்கொண்டு வருகின்றது. மேனாட்டில் உடை தயார்செய்யும் தொழிலானது ஒழுங்காய் அமைக்கப்பட்ட ஒரு சாஸ்திரமாய் விட்டது போலவே ஆகாரமும் ஒரு சாஸ்திர ரீதியின் ஏற்பாட்டை ஒட்டியே தயாரிக்கப்படுகிறது. உடையும், ஆகாரமும் அந்தஸ்திற்கு ஏற்றபடி இருந்தாலொழிய ஆண் பெண்கள் மதிக்கப்படுவதில்லை என்கின்ற எண்ணம் மனிதக்கூட்டத்தில் நிலைபெற்றிருக்கும் முக்கிய விஷயமாக விருக்கிறது. உயர்ந்த நிலையிலுள்ள ஸ்திரீ புருடர்கள் என்ன ஆகாரம் அருந்துகிறார்களோ என்ன உடை தரிக்கிறார்களோ அதையேதான் மற்றவர்களும் உபயோகிக்கவேண்டிய ஆசையால் அது அவசியமெனக்கற்பித்துக் கொள்ளுகிறார்கள். இல்லையேல் அவர்கள் தங்கள் அழகையும், மரியாதையையும் இழந்து மற்றவர்களால் மதிக்சப்படுவதில்லை என்று நினைக்கிறார்கள். இதற்குத்தான் அந்தஸ்து என்றுபெயர். இந்த அந்தஸ்து மேனாட்டில் ஒவ்வொரு நிமிஷத்திலும் மாறிக்கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு வருஷத்திலும் நான்கு தடவை மாறுகிறது. மேனாட்டிலுள்ள உடை, ஆகாரம் சம்பந்தமான வியாபாரிகள் அந்தஸ்து எந்த மார்க்கத்தில் மாறுதலடைகிற தென்பதையும் எம்மாதிரி அந்தஸ்தை ஜனங்கள் விரும்பி ஆதரிக்கிறார்கள் என்பதையும் ஜாக்கிரதையாக கவனித்து வருவதோடு தாங்களாகவே ஒரு புதிய அந்தஸ்தை யுண்டுபண்ணி அதனிடத்து ஜனங்களுடைய கவனத்தை அதிகரிக்கச் செய்கிறார்கள். அப்படி ஒரு வியாபாரி தான் உண்டுபண்ணும் அந்தஸ்தினி

டத்திலே ஜனங்கள் ஆவல்கொள்ளும்படி செய்து விட்டானா னால் அவன் ஜீவிதகாலம் முழுதும் சம்பத்தில் பாக்கியவனா கிறான். அதுபோலவே பண்டிதனொருவன் ஜனங்களுடைய அவசியத்தின் ஆசைக்குத் தகுந்தவாறு மனதை செலுத்தும் மார்க்கம் தெளிவுபட வழிகண்டு அவ்வழி எல்லோரிடமும் போய்ச்சேர ஒரு புத்தகமும் எழுதுவானானால் அந்தப் பண் டிதனின் ஜீவித காலமும் அவன் இறந்த பின்னும் ஒரு பண் டித மனிதனாக்கப்பட்டுவிடுகிறான். நமது தேசத்து வியா பாரிகளுக்கு சமயோஜிதம்போல் ஏதேனுமொரு புதியமாதிரி அந்தஸ்தை யுண்டாக்க முடிகிறதில்லை; நினைக்கவும் அவர் களால் ஆவதில்லை.

நமது வியாபாரிகளுக்குச்சிறிதுபண வந்துவிட்டால் வீட் டில் பூசை, விரத அனுஷ்டானங்கள் வந்து புகுந்து கொள் ளும். மேல்ஜாதி என்பதற்கு வேண்டிய நடிப்பைக் கற்றுக் கொடுக்க புரோகிதக்கூட்டம் நிறைந்து விடும். கோவில் கட் டுவதும், கும்பாபிஷேகம் செய்வதும், தெய்வங்களுக்கு வாக னங்கள், ஆபரணங்கள் செய்வது பிராமண சமாராதனைகள் பண்ணி புண்ணியத்தைத் தேடி மோக்ஷமடைவதற்கு யாத் திரை முடிப்பதில் அவர்கள் பணமும், காலமும், புத்தியும் செலவழிக்கப்பட்டு வியாபாரத்தில் ஒருசிறு மாறுதல் வந்தால் நஷ்டமடைந்து அதற்குப்பின் காலட்சேபம் கேட்பதோடு திருப்தியடைந்துவிடுவார்கள். இவ்வித முறையாலே நமது தேசத்து வியாபாரம் விர்த்தியாய்விட்டது. அதுபோலவே நமது பண்டிதர்களும் உலகம் மாறும் அந்தஸ்துக்குத் தகுந்த படி புஸ்தகங்களெழுதாமல் அர்த்தமாகாததும் பிரயோஜனத் திற்கு உபயோகப்படாததும் அநேக காலங்களுக்கு முன் அந்தஸ்திலிருந்தும், எழுதின பண்டிதர்களுக்கே இன்ன தென்று உணரப்படாததுமானதையே திருப்பித்திருப்பி எழு திக்கொண்டே வந்ததினால் அதையே ஜனங்கள் கேட்டும் படித்தும் ஜனங்களுக்கு அர்த்தமாகாமலும், பிரயோஜனப் படாமலும், ஒரு உபயோகமும் அதிலில்லாமலும் போய்விட்ட தினால் நமது ஜனங்களுக்கு அந்தஸ்தில் ஆசையுண்டானா லும் அதை அனுபோகப்படுத்திக்கொள்ளச் சிந்தனா சக்தியை இழந்தவர்களாய் விட்டார்கள்.

மேனாட்டில் ஆகாரத்திலும், உடையிலும் அந்தஸ்து யாரிடமும் விளையாடும். அதற்குத் தடையில்லை; எங்கும் செல்லும்; எல்லாரிடமும் அது சகஜமாகப் போகும். ராஜா

வின் வீட்டிலுள்ள ஆகார உடையின் அந்தஸ்து பிரபுவின் வீட்டுக்குப் பயமில்லாமல் வரும். ஒரு நாவிதன் மயிர் வெட்டும் அழகால் அவன் வீட்டிற்கு அந்தஸ்து துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடும். ஒரு சக்கிலி தான் தைக்கும் செருப்பின் மேன்மை மிகுதியால் அவனை அந்தஸ்து அள்ளிவாரி எடுத்தணைத்து ஆனந்தப்படும். மேனாட்டில் அந்தஸ்தை அழுக்கிக்கொண்டிருக்கும் போர்டு துரையும் ஒரு கொல்லன் தான். மேனாட்டில் அந்தஸ்தை சட்டத்தாலோ, சாஸ்திரத்தாலோ கடவுள் வாக்காலோ, தடைபடுத்த வில்லை. நமது நாட்டில் ராஜாக்கள், பணக்காரர்கள் உயர்ந்த ஜாதியென்பவர்கள், சாஸ்திரம், தெய்வ கட்டளை, பாவபுண்ணியம் முதலியவைகளால் அந்தஸ்து எல்லாரிடமும் செல்ல வொட்டாமல் தடைப்பட்டிருந்தது. மேனாட்டார்கள் நமது நாட்டில் வேர் ஊன்றின காலந்தொட்டு அந்தஸ்து எல்லா இடமும் தடையில்லாமல் போக இடமிருந்தாலும் இன்னும் பல இடத்தில் பயத்துடனும் போய்க்கொண்டிருக்கின்றது.

இராஜமாளிகைகளுக்கு சிலசமூகம்வந்தால் அரசன்மனை தீட்டுப்பட்டுப் போகுமென்பதும், தெய்வம், ராஜா, சாஸ்திர ஞானபண்டிதன் இவர்களுக்கு தீட்டில்லை என்று சாஸ்திரத்திலிருந்தாலும் பல சமூகங்கள் இவர்களிடம் நெருங்கினால் தீட்டாய்விடுமென்பதும் நமது நாட்டிலுள்ள அனுபோகம்.

பணக்காரர்களிருக்கும் வீதிகளில் செருப்பு போட்டும், குடைபிடித்தும் நடக்கப்படாது; குதிரை ஏறியும், பல்லக்கேறியும் சில ஜாதியார்களின் ஊர்கோலம் தெருவீதி வழி போகப்படாது முழங்காலுக்குமேல் வேஷ்டி கட்டவேண்டும். பெண்கள் இடுப்பிற்குமேல் ஆடை யணியப்படாதென்றும் நமது நாட்டில் அந்தஸ்து தடுக்கப்பட்டிருந்தது. மலையாளத்தில் பிரபுக்கள் உண்ணும் ஆகாரங்களில் பால், பாயாசமும், பெரிய அப்பமும் அந்தஸ்தான ஆகாரம். இதை தாழ்ந்த ஜாதியார் செய்து சாப்பிடப்படாதென்றும் தடுக்கப்பட்டிருந்தது. தாழ்ந்த ஜாதியாருக்கு பால், தயிர், மோர் கொடுத்தாலும் வீட்டு விசேட சமயங்களில் விருந்து பதார்த்தங்களைக் கொடுத்தாலும் பாவமென்றும் இன்னும் கருதப்படுகிறது. சில அந்தஸ்தை அடைய தெய்வம பணக்காரனிடம் வந்துசொல்லி அதற்குப்பின் அந்தஸ்தை சிலருக்கு வழங்கினதாக பல கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நமது தெய்வ குமாரனான முருகன்பேரில் பாடப்பட்டிருந்த

திருப்புகழைப் பழனியில் ஒரு தேவதாசி பாடிக்கொண்டு வந்தாள். அதற்கு முருகன் சந்தோஷப்பட்டு அவள் பேரில் கருணை வந்து தினமும் அப்படியே பாடுவதற்கு பழனியூர் பணக்காரன் கனவில் போய் ஓட்டுவில்லை வீடு கட்டுமந் தஸ்தை தடைபடுத்தியிருக்கும் சட்டத்தை அந்த தேவதாசி பேரிலிருந்து நீககி ஒரு ஓட்டுவில்லை வீடு கட்டிக்கொள்ள உத்திரவு கொடுக்கும்படியாகச் சொல்லி வந்ததாகவும், அவள் அதற்குப்பிறகு அந்த அதிகாரஸ்தனின் உத்திரவுப்படி ஓட்டு வில்லை வீடு கட்டிக்கொண்டதாகவும், சொல்லப்படும் இந்தக் கதையைப் பழனி தெய்வத்தின் பெருமைகளில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. பழனி முருகன் அங்குள்ள பணக்கார குடும்பத்தில் சொன்னாரா? அல்லது பெரிய குருக்கள் கனவில் சாதித்தாரா என்பதில் தர்க்கமும் சந்தேகமுமே ஒழிய திருப் புகழ் தேவதாசி பாடினதும், பழனி முருகன் கேட்டதும், கருணை பிறந்ததும் ஓட்டுவில்லை வீடுகட்டி வாழ உரிமை யில்லாத தேவதாசிக்கு வாங்கிக்கொடுத்ததும் அவள் கட்டிக்கொண்டதாகிய இவைகளில் அவ்விடமுள்ள முருகன் பக்தர்களுக்குச் சந்தேகமில்லை. இப்பொழுது அந்த வீட் டின் பெருமையையும் சொல்லுவார்கள்.

ஒரு ஓட்டுவில்லை வீடுகட்டிக்கொண்டு வாழும் உரிமைக் கும், முருகன்பேரில் பாடப்பட்ட திருப்புகழ் படிக்க வேண் டும், பாடவேண்டும், பணவேண்டும், தொண்டை பதம் வேண்டும், அதை முருகன் கேட்டு சந்தோஷப்பட்டு கருணை வந்து சொர்ப்பனம் சாதித்து அந்தத் தடைச்சட் டத்தை ஒருவருக்கு மட்டும் நீக்குவதானால் நமது நாட்டில் அந்தஸ்து எவ்வளவு தூரம் பாதிக்கப் பட்டிருந்தவென்பதை யும், சாதாரணமான இந்த ஸ்திதியே இப்படியிருந்தால் மற்ற தின் கதியெல்லாம் எப்படியிருக்கும் என்பதையும் கவனித்துப் பாருங்கள். நமது நாடு புண்ணிய பூமியாகவிருந்தாலும் புத் தியும் எண்ணமுமில்லாவிட்டால் அடிமைத்தனத்தை யழைக்கவேண்டுமோ?

நான் இங்கு சொல்லப்பட்ட அந்தஸ்தைக் கட்டுப்படுத் தினால் ஆகாரம், ஆரோக்கியம், கல்வி, அறிவு, தேவை, உயி ரின்பம் யாவும் வற்றிப்போகுமேயல்லாமல் வளருமோ? இதன சக்திகளை மேனாட்டார்கள் தெரிந்து கொண்டமையால் உயிரின்பங்களை அனுபவிக்கிறார்கள். நாமோ பக்திரசத்தில் அழுந்திகொண்டு பல துன்பங்களை ஏற்படுத்தி எதையும் சாத் வீக அவஸ்தை யென்று நினைத்துக்கொண்டு உயிரற்று,

சலனமற்று, ஒடுங்கி எதையும் செய்வதற்கு சக்தியில்லாமல் ஒரு சிறிது ஆலோசனா சக்தியுடையவர்களையும் தூற்றி மிக மிகத் தாழ்ந்த தாமசிக அவஸ்தையில் இருந்துகொண்டு எவருக்கும் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே அழுகி நாற்றமெடுத்துக்கொண்டு மேனாட்டு பப்பர்மெண்டு அந்தஸ்த்தைக் கண்டு நமது குழந்தைகள் ஆசைப்பட அதற்கு சமய ஆச்சாரங்களைக் கற்பித்து தேவாரப்பண்ணைப் படித்து பல்லாண்டு பாடி ஆயிரம் திருநாமத்தினால் தெள்ளேணம் போட்டாலும் அவையனைத்தும் அந்த பருவத்திற்குப் பயன்படாமல் பருவத்தின் ஆசை அதற்குமேல் தாவி குழந்தை அழுகிறது. அதைக் கண்டு கோபம் வந்து பெண்சாதியிடம் சண்டை போடுகிறோம்.

அவைகள் அப்படியிருந்தாலும் நமது தெய்வங்களுக்கோ உட்காருவதற்கு ஒரு முழத்திற்குக் கீழே ரத்தினங்கள், தங்கம், வெள்ளி, தந்தம் முதலியவைகளால் வாகனங்கள், ரத்தினாபரணங்கள். பொழுதுபோக்கோ மாதர்கள் கையால் வாழைமட்டையடி, வசந்த ருது வருகை தெப்பம், நாட்டியம் முதலிய கேளிக்கைகள். நெய்பொங்கலும், பஞ்சாமிர்தமும் ஆகாரம். இவ்வாறே மற்றும் பல வகையாலும் தெய்வத்தின் அந்தஸ்தைக் காப்பாற்றி கொண்டு வருகிறோம். நமது தெய்வங்களுக்குச் சமதர்மமோ ஜனநாயக தத்துவமோ தெரியுமோ தெரிந்திருந்தால் ஓட்டுவில்லை வீடு கட்டிக்கொள்ள உத்திரவு வாங்கிக் கொடுக்கத் திருப்புகழை எதிர்பார்க்குமா? எதிர்பார்த்தாலும் பிச்சைக்காரன் மகனுக்குப் பிச்சைப் புத்தி போகாதென்பது போலவே பிச்சையெடுக்கும் நமது சிவபெருமானின் மகனுக்கு ஒரு ஓட்டுவில்லை வீடு கட்டிக்கொள்ள ஒருவருக்குமட்டும் சொர்ப்பனத்தில் உத்திரவு வாங்கிக்கொடுத்தது தாராள புத்தியல்லவே. கால சக்கிரமானது எவரை நசுக்குகிறது என்பதை ஒருபொழுதும் கவனியாமல் சுற்றிக்கொண்டேயிருக்கிறது. மிக மிகத் தகுந்தவர்களும் மிக மிகப் பலம் வாய்ந்தவர்களுமே உயிர் பிழைக்கின்றனர் என்பதுதானே பிரகிருதியின் அந்தஸ்தும், அதன் கர்த்தாவான கடவுளின் செயலுமாக விருக்கிறது.

நாமெல்லாம் எப்பொழுதும் அந்தர்முகமாய்ப் பார்க்கிறவர்கள், மோக்ஷமடையவே வந்தவர்கள், கடவுள் கைங்கரியமே செய்யவேண்டியவர்கள். நம்முடைய பாவனைகளிலும் பாரமார்த்திக ரகசியங்களே உள்நுழைத்து வைக்கப்

பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறவைகளெல்லாம் அந்தஸ்து என்பதுமட்டுமல்ல; ஆத்ம மோக்ஷமடைவதற்காக வென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் ஆகாரத்திலும் உடையிலுமுள்ள அந்தஸ்து நம்மைவிட்டுப் போகிறதா? அந்தஸ்தை அலட்சியம் செய்யவேண்டிய பாரமார்த்திகத் துறையைத் துப்புரவு செய்ய ஏற்பட்டவர்களையும் அந்தஸ்து பிடித்துக்கொண்டுதானே இருக்கிறது? இரத்தினங்களிழைத்த உருத்திராக்ஷக் கண்டிகைகளும், பட்டுப் பீதாம்பரங்களும் கிளாஸ்கோ காவி மல்லுகளும் உடைகளாகவும், ஆண்டு பண்ணாத தலைவாழையிலையில் பலவிதமான தினுசு வகைகளையுடைய ஆகாரங்களுமல்லவா மடாதிபதிகளின் அந்தஸ்தாகவிருக்கிறது! நமது தெய்வங்களுக்குக்கூட ஆகாரத்திலும் உடையிலும் அந்தஸ்து வேண்டியிருக்கிறது. இல்லையேல் அங்கு பக்தர்கள் கூடக் கூடுவதில்லை. அந்தத் தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்யப்படுவதுமில்லை. அந்தஸ்து இல்லாத தெய்வத்தினிடம் அருளில்லை என்று நினைக்கப்படுகிறது, சீரங்கத்துத் தெய்வம் நெய்யிலும், பழனித் தெய்வம் சிறு மலைப் பழம் பஞ்சாமிர்தத்தாலும் தம் அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்கின்றன. ரத்தின நகைகள், தங்கவாகனங்கள், பழம், பால், தேன், புனுகு, ஜவ்வாது முதலியவைகளால் தெய்வத்தின் அந்தஸ்து காப்பாற்றப்பட வேண்டிருக்கையில் தேசத்தையும் ஜனங்களையும் உய்விக்க உடையும், ஆகாரமும் அந்தஸ்தாயிருப்பதில் ஆச்சரியமில்லை.

பொதுவாக அந்தஸ்தை எந்த தேசத்திலும் தடுப்பதில்லை. நமது நாட்டில் சர்வ சாதாரணமானவைகளில் கூட அந்தஸ்தைத் தடுத்து அது தத்தமக்கே உரிமையென்று மானுஷீகத்தை அவமானப்படுத்தினோம். அதனால் நாமும் கிழானோம். நமது தெய்வங்களும் அடிபட்டு அவதிப்பட்டு வெட்கத்தால் அவமானப்பட்டு நம் முகத்தை ஏறெடுத்துப் பார்க்காமல், பஞ்சம், மடமை, பிளேக், கொள்ளை நோய் முதலியவைகளை உண்டுபண்ணும் காளி, மாரி, காட்டேரி முதலியவைகள் தவிரமற்றெல்லா தெய்வங்களும் நாம் கிழக்கு முகமாக வைத்து கும்பாபிஷேகம் செய்தாலும் அவைகள் மேற்கையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. தெய்வசந்நிதி தீட்டுப்பட்டு விடுமென்னும் தேசத்தில் தெய்வம் எப்படியிருக்கும்?

சிறு கதை

ஹம்ஸ-சுந்திரம்.

(அருணோதயம், புதுவை.)

"என்ன நான் கேட்பதற்குப் பதிலளிக்காதிருக்கிறாய்" என்றுமிரட்டினார் தலைமை உபாத்தியாயர் தன் எதிரில் நின்று கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து.

மாணவன்:—நான் என்ன..........?

தலைமை உபாத்தியாயர்:—உனக்கு என்ன கர்வமிருந் தால் உன்வியாசத்தில் இப்படி எழுதியிருப்பாய்? (ஒரு கடிதத் தைக் காட்டுகிறார்)

மாண:—....உலக நடவடிக்கையைத்தானே எழுதி.......

த. உ:—எல்லா மறிந்த பண்டிதர் போலும்! சரி! இன் றோடு உன்னை இப்பள்ளியினின்று விலக்கி விட்டேன். சென்றுவிடு, என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். நமது மாணவனாகிய சுந்திரமும் (அவன் பெயர்) பள்ளியை விட்டு வெளிப்போந்து ஒரு நீண்ட பாதையை நோக்கி நடக்கலுற் றான்.

சுந்திரம் மதுரையிலுள்ள ஒரு தனவந்தரின் தனிமகன். திருச்சிக்குச்சென்று பி. ஏ. கிளாஸில் வாசித்துக் கொண்டிருந் தான். அவனுக்குத்தமிழில்அதிக பற்றுதலுண்டு. பிராமணர் கள்செய்யும் புரட்டல்களையும் புராணங்களிலுள்ள ஆபாசங் களையும் நன்கறிந்து "சுயமரியாதை" வாழ்வே சுகவாழ் வெனக்கொண்டவன். பரீட்சையில் வருடந்தோறும் முதன்மை பெற்று விளங்குபவன். அவனுக்குச் சுமார் 20 வயதிருக் கலாம். நல்ல திரேக வனப்பும் கூரிய பார்வையும் புன்னகை ததும்பும் மதிவதனமுமுடைய ஒரழகிய வாலிபன். அவன் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர் ஒரு பிராமணரா கையால் அவருக்குச் சுந்திரத்தின் நன்னடக்கை வெறுப்பாகத் தோன்றியது. ஏன்? சுயமரியாதைக்காரர்களென்றால் பார்ப் பனர்களுக்கு வயிற்றெரிச்சல் தானே? உண்மையுரைப்பவன் உலக விரோதியன்றோ!

ஒருநாள் சுந்திரம் துவிச்சக்கர வண்டியிலமர்ந்து செல்லும்போதுத் தன்னெதிரில் ஒருகூட்டம் வந்தது. அதனால் அவன் சற்று விலகிச்செல்ல, அங்குவந்து கொண்டிருந்த சுமார் 14-வயது மதிக்கத்தக்க ஓரிள மங்கையின் கரத்தில் வண்டியின் கைப்பிடிபட்டு அவளுடைய கையிலிருந்த புத்தகங்கள்யாவும் நழுவிக் கீழே விழுந்துவிட்டன. உடனே சுந்திரம் வண்டியை விட்டிறங்கி அப்புத்தகங்களை யெல்லாமெடுத்தடுக்கி அம்மங்கை கையிற்றந்துத் தன்னை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொண்டான். அதற்கு ஹம்சவல்லி (இதுதான் அவளுடைய பெயர்) "தாங்கள் வேண்டுமென்று செய்திரல்லீர், ஆகையால் இதைக்குறித்துத் தாங்கள் வருத்தமுறல் வேண்டாம், தவறென்பது எல்லோருக்கும் உண்டு" எனக் கிளியேபோல் மொழிந்தாள். இம்மொழிகள் அவனுள்ளத்தின் கண் கன்மேலெழுத்தேபோற் பதிந்து விட்டன. என் செய்வான் உயிரையவளுடன் விடுத்துத் தன்னறைக்குட்புகுந்து அங்கோராசனத்தமர்ந்து "மின்னலைப் போன்றென் கண் முன் காட்சியளித்து மறைந்தவப் பாவையினழகு தானென்னே! இயற்கையின் மேன்மையே மேன்மை. அவளுடைய மெல்லிய திரேகமும், மதியை நிகர்த்த நுதலும், மஞ்சினைப் பழித்த கூந்தலும், வேல்விழிகளும், கருத்துவளைந்த இருபுருவங்களும், பிரகாசம் பொருந்திய பார்வையும், பளிங்கு போன்ற கன்னங்களும், செந்தாமரையை யொத்தஇதழ்களும், சற்று நீண்ட கழுத்தும், பரந்த மார்பும், சிறுத்த இடையும், பேடையைப் பழித்த நடையும் எனதுள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன." எனப் பலவாறெண்ணினான். அவ்வணங்கையை மறுமுறை நேரிற் கண்டுபேச வேண்டுமென்பதே யவனுடைய உள்ளக்கிடக்கை.

அன்று மாலை சுமார் 5-மணியிருக்கும். கடற்கரையில் உலவிக் கொண்டிருந்த சுந்திரம் திடீரெனத் தனக்குச் சற்று தூரத்தில் தனியே நின்றுகொண்டிருந்த ஒருமெல்லியளை நோக்கிச் சென்றான். சென்றவன் அவளை நோக்கி "என்னுடைய கவனக்குறைவினால் உனக்கேற்பட்ட விபத்தையும் பாராது என்னை மன்னித்ததற்காகப் பெரிதும் மகிழ்கிறேன் மேலும் நான் உன்னிடம் சில விஷயங்களறிய விரும்புகிறேன் அனுமதிப்பாயா" என்றான்.

ஹம்சவல்லி:—என்ன விஷயம்?

சுந்திரம்:—உன்னைத் தினந்தோறும் பள்ளிக்குச் சென்று வருவதைப் பார்க்கிறேனே தவிர இன்னாரெனத் தெரியாது. அதையானறியலாமா?

ஹ. வல்லி:—(சற்று தலை குனிந்து) தடையின்றியறியலாம். நான் கிருஷ்ணகிரி செட்டியாரின் மகள். போதனாமுறைக் கலாசாலையிற் படித்து வருகிறேன். தாங்கள்........?

சுந்தி:—சந்தோஷம்; நான்குருசாமியின் மகன். இப்போது பி. ஏ. கிளாஸில்வாசித்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் இரு மாதத்தில் எனக்குப் பரீட்சை முடிவடையும் பிறகு நான் எனது சொந்த ஊராகிய மதுரைக்குச் சென்று விடுவேன்.

ஹ-வல்லி:- தங்கள் வகுப்பென்ன?

சுந்தி:- நான் ஜாதிவித்தியாசம் பாராட்டுவதில்லை. ஜாதியென்பது பார்ப்பனப்பேய்களால் கற்பிக்கப்பட்ட ஒரு ஒற்றுமைக் கொல்லியாகும். பார்ப்பன சூழ்ச்சியறியாத பாமர மக்கள் அவர்களைப் பின்பற்றிக் கெடுகிறார்கள். பொய் புரட்டுகள் நிறைந்த பல சாஸ்திரங்களாலும், புராணங்களாலும், வேதங்களாலும், மக்களுடைய அறிவைப் பாழ்படுத்தி அவர்களிடையே மடமையை யுண்டு பண்ணிப் பொம்மைகளைப்போலாட்டி வருகிறார்கள். இன்று நம்மைக் காத்து வந்த நம் தமிழ்த்தாயைத் தமிழ்நாட்டினின்றுந் துரத்தி ஆரிய சூழ்ச்சிக்குத் துணைபுரியவல்ல ஹிந்தியை நம்மிடைய புகுத்த முயன்றவர்களும் பார்ப்பனரேயாவர். அவர்கள் தமிழ்த் தாயின் புதல்வர்கள் யாவரும் சிலரைப்போல் பேச வாயற்று, எழுதச் சக்தியற்று, வலிமை யிழந்து, நடைப்பிணங்களாக இருக்கிறார்கள் என எண்ணி விட்டனர் போலும். தமிழ் மக்களிடையே ஆவேசம் உண்டாயின் பார்ப்பன ஆதிக்கமே பறந்தோடிப்போம் என்று நிச்சயம்'' எனச் சரமாரியாய்ப் பொழிந்தான். இதையாவும் கவனத்தோடுகேட்டுக் கொண்டிருந்த ஹம்சவல்லி ''சரி நேரமாகிறது தங்களுடைய விலாசமென்ன'' எனக்கேட்டுத் தெரிந்துகொண்டு மறைந்து விட்டாள். சுந்திரமும் பலவாறுஎண்ணின வனாய்த் தன்னறையைச் சேர்ந்தான்.

மறுநாட்காலை சுமார் 9-மணியிருக்கும். சுந்திரம் தன்னறையில் உட்கார்ந்து கொண்டு பாடம் படித்துக் கொண்டிருந்தான். அப்போது தபாற்காரன் ஒரு கடிதம் கொண்டுவந்து

அவனிடம் கொடுத்துச் சென்றான். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது:—

அன்புமிக்க சுந்திர!

நான் தங்களைக்கண்ட அன்றுமுதல் என்னுள்ளம் நும் வயப்பட்டு விட்டது. தங்களுடைய எழில் மிக்கதிரேகம் என் மனதைக் கவர்ந்துவிட்டது. சுருங்கச் சொல்லுமிடத்துத் தங்களை யான் உள்ளன்போடு நேசிக்கிறேன். நீர் என்னை யேற்றுக் கொள்வீரென நம்புகிறேன்.

இப்படிக்கு உமதாருயிர்க் காதலி, ஹம்சவல்லி.

இதைப்படித்தும் சுந்திரத்தின்முகம் செந்தாமரையெனத் திகழ்ந்தது. உடனே பதிலும் எழுதிவிட்டான். அன்று முதல் அவர்களுக்குள் காதலென்னும் மரம் வேரூன்றிவளர்ந்துவந்தது ஒருவரை யொருவர் மணந்து கொள்வதென்றும் இதினின்றும் பிறழல் கூடாதென்றும் முடிவு செய்து கொண்டார்கள். இப்படி ஒரு மாதமாயிற்று. ஒரு நாள் தபாற்காரன் சுந்திரத்தினிடம் ஒரு கடிதம் கொடுத்துச் சென்றான். அவன் அதைப் பிரித்துப் பின்வருமாறு வாசித்தான்.

எனதாருயிர்க் காதல!

நான் பள்ளியை விட்டுநின்று இருபது நாட்களாகின்றன அடுத்த மாதத்தில் எனக்கு வேலை தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை நாள் சென்று எழுதும் இக்கடிதத்தில் தாங்கட்கு நல்லவிஷயத்தையெழுத இயலாத அபாக்யவதியானேன். நேற்று மாலை என் தாய் தந்தையர்கள் என் கலியாண விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். அப்போது யான் இதுவரை பார்த்தறியா ஒரு புதிய மனிதரை மணக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். அவர் கஷ்டப்பட்டு 4-வது பாரம் வரையிலும் படித்துவிட்டாராம். கடவுளைக்கனவிலும் மறவாத பக்திமானாம். நான் அதற்குச் சம்மதியாது தங்களைத்தான் மணப்பேன் என்று கண்டித்துச் சொன்னேன். அதற்கவர்கள் சீற்றங்கொண்டு "சுந்திரமா? அவன் நம்மை விடக் கீழ்ப்பட்ட ஜாதியானாயிற்றே; உனக்கு இவ்வளவு கர்வம் எங்கிருந்து வந்தது; உன்னைப் படிக்கவைத்ததின் இலாபம் இப்பொழுதுதான் தெரிகிறது; குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பே!" என்று இன்னவும் பிறவும் பேசி நான்

எவ்வளவு சொல்லியும் அழுதும் கலியாணம் நிச்சயம் செய்து விட்டார்கள். நாளைக்கு மறுநாள் செங்கற்பட்டில் நடக்கும் நான் தங்கட்குக் கொடுத்த வாக்கை மறக்க மாட்டேன். தங்களைக் கடைசிமுறைப் பார்க்கவேண்டுமென்ற அவா எனக்கிருக்கிறது. நாளை மறுநாள் காலை மூன்று மணிவரை தங்களை எதிர் பார்ப்பேன் வராவிடில் என்னுயிரை மாய்த்துக் கொள்வேன் இது நிச்சயம்.

இப்படிக்கு அபாக்யவதி, ஹம்சவல்லி.

அன்றுமாலை வகுப்பில் "இன்றைய இந்தியாவும் அதன் நாகரீகமும்" என்ற விஷயத்தைத் தமிழ் வியாசமாகக்கொடுத்திருந்தார்கள். தன் காதலியினால் ஏற்பட்ட சஞ்சலத்தினால் உயிரையொரு வழிச்செலவிட்டுக் கவலுற்றிருந்த சுந்திரம் தனக்கும்தெரியாது தன் மனம்போனவாறு பின்வருமாறோர் வியாசமெழுதிக் கொடுத்து விட்டான்.

இந்தியாவானது நாளுக்கு நாள் நாகரீகத்தில் மேம்பாடடைந்து வருகிறது. ஆனால் பிராமணரல்லாத இந்தியர்கள் (தமிழர்கள்) முன்னேற்றமடைந்த பாடில்லை. அவர்கள் ஆரியர் சூழ்ச்சி வலையிற் சிக்குண்டு கிடக்கிறார்கள்........ ஜாதி வித்தியாசம் தேசமக்கள் முன்னேற்றத்திற்கோ முட்டுக்கட்டையாயிருக்கிறது. ஒரு வாலிபன் அல்லது ஒரிளமங்கை தனக்கிஷ்டப்பட்ட ஒரு தெரிவையை அல்லது ஒரு மணமகளை மணக்க உரிமையில்லை. பிள்ளைகளின் முற்போக்கிற்குப் பெற்றோர்களே பெரும் வேலியாக இருக்கின்றனர். இவர்கள்மீது குறைகூறி யென்னபயன் பார்ப்பனசூழ்ச்சியைத் தகர்த்தவன்றே பாலிய பாலிகைகட்கு விமோசனங்கிடைக்கும் அதை நாம் மேற்கொண்டு...................................... இதுவே அவ்வியாசத்தின் ஒரு பகுதி. இதைப்படித்த அப்பார்ப்பனத் தலைமையுபாத்தியாயருக்கு சுந்திரத்தின் மேல் ஏற்கனவேயிருந்த வெறுப்பு அதிகப்பட்டது. உடனே நாம் மேற்கூறியவாறு அவனை மிரட்டி வெளியேற்றி விட்டார். சுந்திரமும் மிகுந்த தன்கவலையினால் வேறொன்றுஞ் செய்யத் தோன்றாதவனாய் நடக்கலுற்றான்.

அவ்வாறு பாதையே சென்ற சுந்திரம் புகைவண்டி நிலையத்தை யடைந்து வண்டியேறிச் செங்கற்பட்டு வந்து சேர்ந்தான். இரவு சுமார் ஒருமணிக்கு வண்டியை விட்டிறங்கியமந்து சுந்திரம் நிலையத்தைக் கடந்து ஒரு அகன்ற பாதையே

சென்றுகொண்டிருந்தான். விண்ணிலிபங்கும் வெண்ணிலா கார்மேகங்களாற் கவரப்பெற்று ஒளிமழுங்கி நின்றது. அவ் வழியில் ஜன நடமாட்டமே யில்லை. திடீரென சுந்தரம் தனக்குச் சற்று தூரத்தில் ஒரு கருத்த உருவம் வருவதை கண்டு திடுக்கிட்டு அசைவற்று நின்று உற்றுநோக்கினான். அவ்வுருவத்திற்குப் பின்னால் சற்று தூரத்தில் இன்னொரு உருவம் அதைப் பின்பற்றி வருவதைக் கண்டான் முன்பு வந்த உருவம் ஒரு மாந்தோப்பினுட் புகுந்து மரங்களிடை நிழலிலே சற்று சென்று ஒரு மரத்தடியில் வந்து நின்றது. பின் வந்ததும் அவ்வாறே சென்று மற்றோர் மாத்தடியின் நிழலில் நகர்ந்து நின்றது. முன்புவந்த உருவமானது சற்று தாழ்ந்த குரலில் "ஆ! விடியற்காலையிற் கலியாணமா? சரி! எப்படி நடக்கும் பார்ப்போம். ஏ! அறிவிற் சிறிய பெற்றோர் களே! இனியாவது உங்கட்கு நற்புத்தி பிறக்குமா? உமது மக் மக்களுடைய வாணாளை வீணாளாக்காமல் அவர்கள் மன திற்குப் பிடித்தவர்களை மணக்கச் செய்வீர்களா? அவ்வாறு செய்வீர்களாகில் உலகத்திற்கே ஒரு பேருதவி புரிந்தவர்களா வீர்! கலப்புமணமின்மையால் எத்தனைக் கன்னிகைகள் தங் கட்குப் பிடித்த ஒருவரை மணக்க வியலாது கவலுற்றுக் கரைந்துருகிக் கடிதில் முடிவெய்திருக்கிறார்கள்? ஆ! எனதா ருயிர் சுந்திரத்தை யெப்போது காண்பேன்! ஆ! அபாக்கிய வதியான எனக்கா அவருடைய சுந்திர வதனக்காட்சி கிடைக் கப்போகிறது, இனி பிதற்றுவதில் பயனில்லை. சுந்திரா நீர் என்னைப்பற்றிக் கவலுறாது நீரேனும் சுகமெய்துவீ ரென நாப்புகிறேன்............ஆ........!!! எனச்சொல்லி முடித் தாள் மறு விநாடிக்குள் "தடால்" என்ற சப்தம் கேட்டது. அப்போதுதான் மறைந்திருந்த உருவத்திற்கும், சுந்திரத்திற் கும் அங்கோர் கிணறு இருந்ததென்று தெரிந்தது. சுந்திரம் சற்று தூரத்திலிருந்தமையால் இவள் பேசிய யாவும் சரியாய்க் கேட்கவில்லை. ஆனால் அவ்வுருவமாகிய போலீஸ் இன்ஸ் பெக்டர் கடிதிலங்குப்போந்து ஊது குழலெடுத்தூதினார். உடனே நான்கு போலீஸ்சிப்பந்திகள் அங்குற்று இன்ஸ்பெகடர் சொற்படி கிணற்றிலிறங்கி அதிவிரைவிலவ்வணங்கை வெளியேற்றினர். இதற்குள் நிலாவும் பளிங்குபோல் பிர காசித்தது. சுந்திரம் அவர்களிடம் வந்து கிணற்றில் விழுந்த அப்பாவை தன் காதலி ஹம்சவல்லியெனவறிந்து கண்ணீர் சொரிந்தான். அவள் மூர்ச்சை தெளிந்து தழதழத்தகுரலில் "சுந்....தி....ர....ம்........இன்........னு மா....மா....வர....வில்லை" என்றாள் உடனே சுந்திரம் "ஹம்சா" இதோ வந்து நிற்கி

றேன்'' என்னலும் ஹம்சவல்லி தைரியமாகச் சடாலென் றெழுந்து அவனைக் கட்டித் தழுவியோர் முத்தமிட்டு மறு படியும் மூர்ச்சையானாள். உடனே இன்ஸ்பெக்டர் இவர் களிருவரையும் ஓர் வண்டியிலேற்றிச் சென்று விட்டார். அன்று இன்ஸ்பெக்டர் நகர சோதனைக்கு வந்ததனால் ஒரு உயிர் தப்பியது.

இது நிற்க, மணவீட்டில் வைகறைக் காலத்தில் மணம களைக் காணாமல் எங்கு தேடியும் அகப்படாததனால் மண வினையை நிறுத்தி விட்டனர். இதனால் மணவீட்டாருக்கு ஏற்பட்ட சஞ்சலத்திற்கோர் அளவேயில்லை. மறுநாட்காலை 10 மணிக்கு மேல் இவ்விஷயம் விசாரணைக்குவந்தது. ஹம்சத்தினுடைய தாய் தந்தையரும் ஆஜராயிருந்தார்கள். தங்கள் பெண் உயிரோடிருப்பதைக்கண்டு சந்தோஷங்கொண் டார்களாயினும் இவ்வாறு தங்கட்குப் பங்கமேற்பட்டதை நினைத்து வருந்தலாயினார்கள். விஷய விசாரணையின் போது ஹம்சவல்லியும் சுதந்தரமும் யார் மேலுமிப்பழியைச் சுமத்தாது இச்சம்பவத்திற்குக் காரண கர்த்தர்கள் தாங்களே யெனப் பகன்றனர். ஏனெனில் மாதாபிதாக்களைக் காப்பது மக்களின் கடனன்றோ? பிறகு தாங்கள் ஒருவருக்கொருவர் நேசிப்பதாகவும் தாங்கள் முடிவு செய்துள்ள மணவிஷயத் தையுஞ் சொல்லி நின்றார்கள். தற்கொலை தகாத காரிய மென்றாலும் மேன்மை தங்கிய நியாயாதிபதி இவ்விருவ ருக்குள் உள்ள பரஸ்பர அன்பை நன்குணர்ந்து அக்கே ஸைத் தள்ளிவிட்டதாகவும் "ஹம்ச சுந்திரத்திற்கு" ரிஜிஸ் டர்த் திருமணம் செய்விக்கும்படியும் தீர்மானம் செய்தார். அவ்வாறே மணவினை மிகவும் சிறப்பாக நடந்தது. மணமக் களிருவரும் மனமொத்து வாழ்க்கையை நடத்துகின்றனர். சுந்திரமும் பி. ஏ. பரீட்சையில் தேர்ச்சி பெற்றான் "ஹம்சத் தைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது அவள் எந்த இழிகுலமோ! ஜாக்கிரதை" எனச் சுந்திரத்தைப் பயமுறுத் திய குருசாமி இப்போது ஹம்சவல்லிக்கு அன்பு நிறைந்த மாமனாராகி விட்டார். பிள்ளைகள் என்னதான் பெரும் பிழை செய்திடினும் பெற்றோர்கட்கு அவர்கள் பாலுள்ள பாசம் போய்விடுமா.

ஜாதிபேதம் ஒழிக! கலப்புமணம் பரவுக!!

பூ தோற்றம்.

ஆர். மெக்மிலன்

அத்தியாயம் 2.

வானத்தின் ஆழம்.

சென்ற அத்தியாயத்தை வாசித்துப்பார்க்கையில் "வானம்" என்பதைக்குறித்து உனக்குக்குறிப்பிட்டிருப்பதைக் கண்டேன். "வான"த்தைப்பற்றி விளக்காமல் மேற்செல்வது நல்லதல்ல எனக்கருதி அதைப்பற்றி இந்த அத்தியாயத்தில் விளக்குகிறேன். வானம் என்ற ஒரு வஸ்து இல்லை. மனிதர்களே கற்பித்ததைத் தவிர வேறொன்றுமில்லை. நீ பகலில் பார்க்கிற நீலம் உண்மையிலே ஒரு வஸ்துவல்ல. சூரிய ஒளியினால் உண்டாகிற பலனே. பகலில்கூட மூடுபனியாக இருக்கிறநாட்களில் உயரப்பார்த்தால்நக்ஷத்திரங்களைக்காணலாம். ஆகவே "வானம்" என்று சொல்லுவதற்கு ஒரு வஸ்துவுமில்லை. நமக்குமேலே இருக்கிற வஸ்துக்களைப்பற்றி நான் சொல்லுவதை நீ சுலபமாக அறிந்துகொள்ளும்பொருட்டே நான் "வானம்" என்ற சொல்லை உபயோகிக்கிறேன். மேலே என்றால் என்ன? ஒன்றுமில்லை. இந்தச் சிறிய உலகத்துக்கு அப்பால் "மேலும்" இல்லை "கீழும்" இல்லை. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கும் இல்லை. திசையே இல்லை.

இவைகளைப்பற்றி எல்லாம் சொல்லிவிட்டதால் உனது மூளைக்கு ஒரு மாத ஓய்வு கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அதனால் ஒன்றும் பயனில்லை. நீ யோசிப்பதால் உண்மையைக்கண்டு கொள்ளமாட்டாய். உண்மையை அறிய உன்னிடத்தில் விஷயங்கள் இருக்கவேண்டும். உனது சொந்த எண்ணங்களே உன்னை ஏமாற்றிவிடும். பூமி எப்படி உண்டாயிற்று என்று நீ என்னைக்கேட்டபோதே இதை அறிந்து கொள்ளுவதற்கு முன் நீ அறியவேண்டிய விஷயம் ஏராளமாக இருக்கிறதென்றும் அவைகளைப்பற்றி விளக்கவேண்டுமென்றும் நினைத்தேன். அவைகளில் முதன்மையானது "வானம்"

என்றால் என்ன? என்பது. நான் சொன்னதுபோல் "வானம்" ஒன்று இல்லை. இரவில் தூரத்தில் பல நக்ஷத்திரங்களைக் காண்பாய். அவைகளில் சில சூரியனைவிட 10 லக்ஷம் மடங்கு பெரியவைகள். அவைகளை என்ன தாங்கிக்கொண்டிருக்கின்றன? அவைகள் அசையாது இருக்கின்றனவா? இல்லை. அவைகளை ஒன்றும் தாங்கிக்கொண்டிருக்கவில்லை. ஒவ்வொன்றும் பறந்து கொண்டிருக்கிறது.

இப்பிரபஞ்சத்தில் எதுவும் அசையாது நிற்பதில்லை. ஒன்றும் ஒரு வினாடியாவது ஒரேவிடத்திலிருப்பதில்லை. இதை உணர்வது உனக்கு மிகக் கஷ்டமாய்த்தானிருக்கும். ஆனால் இவைகளைப்பற்றி உனக்கு முதலில் விளக்காமல் பூதோற்றத்தை விளக்கினால் ஒன்றும் பயன் பெறாது.

நீ இரவிலே ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்களைப்பார்க்கிறாய். அவைகள் மிகத்தூரத்திலிருக்கின்றன அல்லவா? உன்னால் அவைகளின் தூரத்தைச் சொல்ல முடியுமா? அல்லது இந்த உலகத்திலே வசிக்கிற மற்றவர்களுக்காவது தெரியுமா? என்று கேட்டுப்பார். அனேகருக்குத் தெரியாது. அனேகருக்குத் தமக்கு இவைகளைப்பற்றி தெரியாது என்றே தெரியாது. எவ்வளவோ படித்த மேதாவிகளுக்கும் அவர்கள் வசிக்கிற உலகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. நக்ஷத்திரங்கள் எவ்வளவு தூரத்திலிருக்கின்றன? இந்த உலகம் எப்படி தோன்றியது? எப்படி முடியப்போகிறது? என்பது அவர்களுக்குத்தெரியாது. அறிய ஆசையும் கிடையாது. நூறாண்டு உயிர்வாழ்ந்துவிட்டு இன்னும் அதிக காலத்துக்கு உயிர்வாழப் பிரியப்படுகிறார்களே பொழிய உலகம் என்றால் என்ன? என்பதை அறிய ஆசைப்படுவதேயில்லை. எத்தனையோ கோடிக்கணக்கானபேர் பிறந்து உயிர்வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள். பிரபஞ்சத்தின் உண்மையைப்பற்றி கனவில்கூட சிந்தித்ததேயில்லை. எல்லாம் மாயை மாயை என்று சொல்லிக்கொண்டே கொட்டாவி விட்டுவிட்டார்கள். மாயையுமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் அதிசயம், ஆனந்தம், உயிர் என்றால் என்ன என்று அறிந்துகொண்டால் உனது சந்தோஷத்தின் அளவு சொல்ல முடியாது. இந்த அதிசயமான உலகத்தைப் பற்றியும் நாம் எவ்வளவு அற்புதங்களுக்கிடையே வசிக்க வேண்டியிருக்கிறது என்பதையும் அறிய வேண்டியது மிக முக்கியமானது.

தென் சிலுவை என்ற நக்ஷத்திரத்தைப்பற்றி அறிந்திருப்பாய் அல்லவா? ஆதியில் ஸ்பானிய கப்பற்யாத்திரீகர்கள் தெற்கே இந்த நக்ஷத்திரங்களைக் கண்டதும் அவைகள் சிலுவைபோல் காணப்பட்டதால் சிலுவையென்று சொல்லி வணங்கி வந்தார்கள் எவ்வளவோபேர் அவைகள் சிலுவை போல் இல்லை என்றும் சொல்லி வருகிறாகள். நக்ஷத்திரம் என்றால் என்ன என்பதை நீ அறிந்து கொண்டு விட்டால் அவைகள் சிலுவை வடிவமாயிருக்கிறது என்று சொல்லுவதற்கு அர்த்தமேயில்லை என்பதை உணர்வாய்.

அந்த நக்ஷத்திரங்களில் ஒன்று தான் வான சாஸ்திரிகளால் "ஆல்பா சென்டாவ்ரி" என அழைக்கப்படுகிறது. முதன் முதலாக நமது உலகத்துக்கும் அதற்குமுள்ள தூரத்தை அளந்திருக்கிறார்கள். அதன் தூரம் தெரியுமா? இப்பொழுது நமக்குத் தெரிந்தவரையில் சுமார் 26,000,000000 மைல் என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால் எவ்வளவு தூரம் என்று எனக்கும் தெரியாது. மற்றவர்களுக்கும் தெரியாது. ஒரு மில்லியன் என்று சொல்லக்கூடிய அளவு எவ்வளவு என்று உன்னாலும் அறிய முடியாது; என்னாலும் அறியமுடியாது. அமெரிக்கர்கள் ஒரு மில்லியன் என்றால் ஏதோ ஒரு அளவு வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அந்த கணக்குகளைப்பற்றி விவாதிப்பதில் பயனில்லை. இருவர்களுடையவும் கணக்குகளும் நமது அறிவுக்கு எட்டாதவைகளே. வான சாஸ்திரிகள் விண்மீன்களை அளப்பதற்கு நாம் உபயோகிக்கும் சாதாரண எண்களை உபயோகிப்பதில்லை. மைல் என்ற அளவுகோலால் அவைகளை அளப்பது நாட்பட்ட பழைமையான வழக்கம். வான சாஸ்திரிகள் அளவு வித்தியாசமானது. அதன வெளிச்சத்தின் வேகத்தைக்கொண்டு அதன் தூரத்தைக்கணக்கிடுகிறார்கள்.

வெளிச்சம் எந்த வேகத்தில் செல்லுகிறது என்று உனக்குத் தெரியுமா? நம்மால் அளக்கக் கூடிய வேகத்தில் தான் வெளிச்சத்தின் வேகம் பாய்ந்து செல்லுகிறது என்று சொல்லப்பட்டவுடன் நான் ஆச்சரியமடைந்தேன். அதைப்பற்றி ஒருபொழுதும் நினைத்ததேயில்லை. ஆக்ரஷ்ண சக்தி எப்படி சதா இருந்துகொண்டிருக்கிறதோ அதே போல் வெளிச்சமும் சதா இருந்துகொண்டுதானிருக்கும் என்று நினைத்தேன். நீ ஒரு டம்ளரை கையிலிருந்து கீழே விழச் செய்தால்

தானாகவே உடனே தரையில் விழுந்து விடுகிறது. பூமியின் சக்தி ஒருவித வேகத்தினால் பொருளை தன் வசம் இழுத்துக்கொள்ளுகிறது என நான் நினைக்கவில்லை. நான் பெரியவனாகும்வரை ஆக்ரஷண சக்தியைப்பற்றி அறியவேயில்லை. இது போலவே வெளிச்சத்தைப்பற்றிய எண்ணமும் எனக்கு இருந்து வந்தது.

வெளிச்சம் ஒரு செக்கண்டுக்கு 1,86,000 மைல் வீத வேகத்தில் செல்லுகிறது. இதை நீ நன்கு மனதில் வைத்துக் கொள்ள வேண்டும் இல்லையேல் வானசாஸ்திரத்தைக்குறித்து "அ" என்கிற அக்ஷரங்கூட உன்னால் அறிந்துகொள்ள முடியாது. மீண்டும் வெளிச்சம் செக்கண்டுக்கு 1,86,000 மைல் வீதம் செல்லுகிறது என்பதை மனதில் வைத்துக் கொள். பூமியின் சுற்றளவு 25,000 என்று வைத்துக்கொண்டால் ஒரு செக்கண்டில் பூமியை சுற்றி வெளிச்சம் எத்தனை தடவை செல்லுகிறது என்பதை நீயே கணக்கிட்டுப்பார். அப்பொழுது தான் உன் மனதில் நிலைத்திருக்கும். நான் சொல்லுவதினாலேயே எதையும் ஏற்றுக்கொள்ளாதே. நீயே செய்துப்பார். நான் சொல்லுவது தப்பிதம் என்று நீ காட்டினால் உனக்கு நான் அனேக வந்தனம் அளிப்பேன்.

இப்பொழுது உனது வீட்டை விட்டு சமீபத்திலுள்ள நக்ஷத்திரத்தை நாடி ஒளிக்கதிர் ஒன்று செல்லுகிறதாக வைத்துக்கொள். எவ்வளவு காலத்தில் அதைப்போய் அடையும்? உன்னால் கணக்கிட முடியாது. சிறிது கஷ்டமாயிருக்கும். நான் சொல்வதே நல்லது. அதாவது சமீபத்திலுள்ள நக்ஷத்திரத்தை சென்று அடைய $3\frac{1}{2}$ வருஷம் செல்லும். இதுதான் சமீபத்திலுள்ள நக்ஷத்திரம்! இதுவே இப்படியானால் மற்ற நக்ஷத்திரங்களின் தூரமென்னவிருக்கும்? வெகு தூரத்திலுள்ள நக்ஷத்திரத்தின் தூரமென்ன விருக்கும்? எனக்கும் தெரியாது யாருக்கும் தெரியாது. சமீபத்திலிருக்கும் அந்த நக்ஷத்திரத்தை நீ அடைந்து விட்டாய் என்று வைத்துக்கொள். அங்கிருந்து அடுத்த நக்ஷத்திரத்தைப்பார்த்தால் இதைப்போல் 60 அல்லது 100 வருடக்கணக்காய் வெளிச்சம் செல்லக்கூடிய தூரத்திலிருக்கிறது. சில நக்ஷத்திரங்கள் ஆயிர ஆயிர வருடக்கணக்காக வெளிச்சம் செல்ல வேண்டிய தூரத்திலிருக்கின்றன என இப்பொழுது விஞ்ஞானிகளுக்குத்தெரிய வந்திருக்கிறது. ஒவ்வொன்றைக்குறித்தும் அதன் தூரத்தைக் குறித்தும் நினைத்துக்கொண்டே

மக்களுக்கு ஏற்ற உண[illegible]

(ஜார்ஜ் பெர்னாட்ஷா.)

ஆங்கில நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்கள், மனிதனின் உடல் வளர்ச்சியைப்பற்றி ஓரிடத்தில் குறிப்பிடும்பொழுது மாக்கறி உணவு புசிக்கும் ஜாதியினர் தான் இராணுவ வலிமிகுந்திருப்பர் என்று கூறினார். அப்பெருங் கிழவரின் கூற்றில் உண்மையிருக்கிறதென்பதைச் சரித்திரப்பேராசிரியர்களும் விஞ்ஞானிகளும் வெகு நாட்கள் கழித்தே ஒப்புக்கொண்டனர்.

மனிதன் உணவைக் கொள்ளும் உருப்புகள் இயற்கையாகவே மாக்கறி உண்பதற்காக சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறதா? மாமிசம் உண்ணுவதற்கு ஒத்தவிதமாக அமைக்கப்பட்டிருக்கிறதா? சத்துப்பொருள் மாக்கறியில் அதிக மிருக்கிறதா? அல்லது மாமிசத்தில் மிகுந்திருக்கிறதா? இக்கேள்விகளுக்கு விஞ்ஞான அறிஞர்கள் ஆராய்ச்சியின் மூலமாக விடையளித்திருக்கிறார்கள். அவர்கள், மனிதனுடைய குடல் நீளத்தையும், புலி சிங்கம் போன்ற மாமிச பட்சிணிகளின் குடல் நீளத்தையும் கணக்கிட்டுக் கீழ்க் கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

"புல் பூண்டு தின்னாமல் இரைச்சி யுண்ணும் காட்டு மிருகங்களின் குடல் மிகக்குறுகி யிருக்கிறது. மனிதனுக்குக் குடல் அதிக நீளம். இக்குடலில் தான் ஜீரணமான பிறகு வெளியே வந்து தள்ளவேண்டிய சக்கைகளெல்லாம் வந்து தங்கும். சக்கைத்தூள் பெரும்பாலும் சிறு குடலில் இழுக்கப்பட்டாலும் கூட பெருங்குடலிலுள்ள சக்கைகளிலிருந்தும் ரசங்கள் கிரஹிகப்படுகின்றன. இக்குடலில் போய் தேங்குவது மஷ்டுவான

போனால் அதற்கு முடிவேயிருக்காது. இந்தவிதமான ஆதியும் அந்தமுமில்லாத இடைவெளியை நீ வானம் என நினைத்திருந்தாய். ஆனால் ஆகாயம் இல்லை. ஆதியுமில்லை அந்தமுமில்லை, வானமுமில்லை அப்படியானால் உலகம் எப்படி தோன்றியது? என்று நீ கேட்கலாம்.

(தொடரும்)

தால் அவைகள் கெட்டுப்போய் விஷப்பொருள்களைக் கக்கு கின்றன. இதிலிருந்து அச்சக்கைகள் சீக்கிரம் வெளியே தள்ளப் படவேண்டும், இல்லையேல் விஷப் பொருள்கள் உள்ளிழுக்கப் பட்டு ரத்தத்தில் கலந்து பல நோய்களை உண்டுபண்ணும்.

குடலில் வெகு சீக்கிரத்தில் கெட்டு, விஷங்களை உண்டாக் கக்கூடியது மாமிச உணவு. மரக்கறி அக்குணமுடையதல்ல. இது கெட்டு விஷப் பொருளைக்கக்க அதிக நேரமாகும். மாமிச பட் சிணியான புலி, சிங்கம் முதலியவை மேற்கண்ட காரணத்தால் அழியாவண்ணம் இயற்கையிலேயே பெருங்குடல் குட்டையாக அமைந்துள்ளது. வெகு சீக்கிரத்தில் அவைகளுக்கு பலம் வெளி யேறிவிடும். மனிதனின் பெருங்குடலோ பல சக்கைகளை வெளி யேற்ற அதிககாலம் எடுத்துக் கொள்ளுகிறது. ஆகவே மனித னின் குடல் மரக்கறி உணவிற்கே அமைந்தது.

ஆராய்ச்சியின் முடிவு ஒருபுறமிருக்க உலகத்து மேதாவி கள் பலரை எடுத்துக்கொள்ளுவோம். இவர்கள் எல்லோரும் புலாலுண்ணாதவர்களாகவே இருக்கின்றனர். இவ்வரிய பழக்கம் இந்தியாவிற்குப் புதிதன்று. இத்தேசத்து அவதார புருஷர்கள் எல்லோரும் மக்களுக்குப் போதித்துள்ள முதல் உபதேசம் புலால் உண்ணாமை பற்றியே. இதை வற்புறுத்தாத நூல்கள் இல்லை. இந்நூற்றாண்டில் அஹிம்சை உருவாக அவதரித்துள்ள காந்தி யாரைப் பின்பற்றுவோராகச் சொல்லிக் கொள்ளும் எத்து ணைப்பெயர்கள் புலால் உண்ணுவதை விட்டிருக்கிறார்கள்? கொ லைக்கஞ்சா நெஞ்சு படைத்த ஐரோப்பிய சர்வாதிகாரிகளில் சிலர்கூட புலால் உண்பதில்லை யெனக் கேட்ட பின்பாவது அவ்வுணவை இவர்கள் விட்டொழிப்பார்களா?

ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் புலால் உண்பதில்லை. அவ ருடைய உணவு வகை பழங்களும் முட்டையுமே. தேயிலைப் பான வகள் கூட அவருக்குத் தேவையில்லையாம். மது பானத்தை அவர் கையால் தொடவுமாட்டார்.

துருக்கி சர்வாதிகாரி கமால் அடாதுர்க்கை எடுத்துக் கொள் ளுவோம். அவர் புலால் உண்பதில்லை. மீனும், பச்சைக்காய் கழங்கும் தான் அவரது முக்கிய உணவு.

ஸீனர் முசோலினி மாமிசஉணவை விட்டொழித்ததாக சமீ பத்தில் கூறியுள்ளார். ஹிட்லரைப் போன்று பழங்களைப் புசிப்

பதில் அவருக்கு வெகு பிரியம். ஆனால், அவர் மிதக் குடிப்பழக்க முடையவர்.

ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினும் மாமிச உணவு கொள்பவரில்லை. ஆனால், அதை அறவே விட்டொழித்த வருமன்று. அவர் பழங்களை விட, உப்பிட்டுப் பக்குவப் படுத்தப்பட்ட கிழங்குகளாலான உணவையே உட்கொள்ளுகிறாராம். உப்பு இல்லாமல் ஒருநாள் உணவைக்கூட அவரால் உண்ண இயலாதாம்.

இவ்விதம் சர்வாதிகாரிகளின் உணவில் ஏகோபித்த ஒற்றுமையிருப்பது ஆச்சர்யமல்லவா?

மனிதனுடைய உணவுப்பொருளில் சேர்க்கப்படுகிற உப்புக்கு அதிக மகிமையிருக்கிறது. அதில் அடங்கியிருக்கும் இரும்புச் சத்து மனிதனின் தசை வளர்ச்சிக்கும் புத்தி தீட்சண்யத்திற்கும் இன்றியமையாதது. உப்புடன் பக்குவமான உணவும் கொழுப்புச் சத்துக்களடங்கிய நெய்யும், பாலும் காய்கறி வகைகளும் சேர்த்து உண்ணும் மனிதன் ஆரோக்கிய வாழ்வு பெறுவான்.

காலால் டைப்ரைட்டிங்.

வங்காளத்தில் அப்துல் காலீக் என்ற ஒரு சிறுவன் காலில் பேனாவை பிடித்துக்கொண்டு வெகு அழகாக எழுதுகிறான்.

சீமையில் செயின்ட் ஜான்க்ரோல் என்ற ஊரில் பீட்டர் ஓடேல் என்ற பையன் கால்விரலால் டைப்ரைட்டிங் மெஷினை உபயோகிக்கக் கற்றுக்கொண்டு சாமார்த்தியமாகச் செய்கின்றான்.

ஒரு பெரிய ஜுரத்துக்குப் பிறகு அந்தப் பையனுக்கு கைகள் விறைத்துவிட்டன. இடதுகாலும் சூம்பிப் போயிற்று. வலது காலை மட்டும் உபயோகிக்க முடிந்தது. அந்தக்காலாலேயே டைப்பும் செய்துகொண்டு டைப்ரைட்டர் ரோலரையும் தள்ளுகின்றான்.

காலில் பிரஷ்ஷை இடுக்கிக்கொண்டு சித்திரம் வரைகின்றான். காலினாலேயே கிராமபோன், ரேடியோ மெஷின்களை உபயோகத்துக்குத் திருப்பிவைக்க அவனுக்குப் பழக்கமுண்டு.

வீட்டில் ரப்பர் செய்கிறீர்களா?

தக்காளிப் பழத்தோல்களை எறியவேண்டாம்.

இத்தாலிய அதிகாரி கண்டுபிடித்திருக்கும் புதுமை

டாக்டர் மௌரீ என்பவர் பிரபல இத்தாலிய ரசாயன சாஸ்திரி. இவர் பார்மாவில் (இத்தாலி) ஓர் ஆராய்ச்சிச்சாலை அமைத்துக்கொண்டு கடந்த 6-வருட காலமாக தக்காளிப் பழத்தோல்களைக்கொண்டு ரப்பர் தயார் செய்ய முயன்று வந்தார். இவ்வளவு நீண்டகால ஆராய்ச்சிக்குப்பின் அவர் வெற்றி பெற்றுவிட்டதாகத் தெரிகிறது. இவர் செய்த ஆராய்ச்சி முடிவை சர்க்கார் ஆராய்ச்சி நிலயத்தினரும் அங்கீகரித்து விட்டனர் அஃதாவது இத்தாலியில் வருடா வருடம் 176,00,00,000 பவுண்டு தக்காளிப் பழத்தோல்கள் கிடைத்தல் கூடும். இத்தோல்களைக்கொண்டு, 44,00,000 பவுண்டு ரப்பர் தயாரித்தல் கூடுமாம்.

இரைச்சல் ஆரோக்கியத்திற்கு கெடுதியானது.

நல்ல தூக்கத்துக்கு அமைதி மிக நல்லது என்றும், சப்தம் மிக மெதுவாக இருப்பினும் நரம்புகளுக்கு எழுச்சி யூட்டித் தூக்கத்தின் பயனுக்குக் கெடுதி விளைவிக்கின்றதென்றும் டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

தெருக்களில் உள்ள சப்தத்தால் ஏற்படும் தீமையை இந்தியாவில் பட்டணவாசிகளும், நகர வாசிகளும் நன்கு தெரிந்து கொண்டனர். மோட்டார்கள், பஸ்கள், லாரிகள் ஆகிய மூன்றும் அளவுகடந்த இரைச்சல் போட்டு தூக்கத்தைக் கெடுக்கின்றன; தூசியைக் கிளப்பி நோயை உண்டுபண்ணுகின்றன. பாதசாரிகளை மட்டுமின்றி அவற்றில் பிரயாணம் செய்வோரையும் காயப்படுத்துவதின்றிச் சில சமயங்களில் அவர்கள் உயிருக்கே ஆபத்தை விளவிக்கின்றன. இதைத் தான் பொதுஜன விரோதி நம்பர் ஒன்றாக்க வேண்டிய தடை முறைகளைக் கையாளவேண்டுமென்று பலர் கருதுகின்றனர்.

மரித்த சரீரம் பதப்படுத்தும் விதம்.

(எம். சிங்காரவேலு)

கோவா பட்டணத்தில் அச். சாவேரியார் என்னும் சாமியாரின் பிரேதம் 400 வருஷமாயும் நாற்றம், இளைப்புயாதொன்றுமின்றித் தூங்கும் பாவனையாகவேவைக்கப்பட்டிருக்கிறதாகவும், அதனைப் போய் பார்த்துவந்தவர்கள், அது 'கடவுளின்' மகத்துவம் என்று சொல்லிவருகிறார்கள்.

அவ்விதம் அந்தப் பிரேதம் கெடாமலிருப்பதற்கு 'கடவுளு'டைய சக்தியல்லவென்றும் ரசாயன முறைகளைக் கொண்டுதான் காப்பாற்றப்பட்ட (Preserved) தேகம் கெடாமல் இருக்கிறது. அதற்குத் தகுந்த சமாதானம் பின் வருபவைகளால் அறிந்துகொள்க.

மரித்துப்போன தேகம், பதப்படுத்தப்பட்டால், அதனை மம்மி (Mummy) என்று வழங்குவார்கள். "மம்மி" என்றால், வாசனை கட்டிவைத்த சவம் (a dead human body embalmed) என்றும் சிதையாமல் பாகம்பண்ணப்பட்ட சவம், அல்லது தைலமாட்டிய பிரேதம். (a dead human body, embalmed after the manner of ancient Egyptians with wax, balsams etc) என்று தமிழ் அகராதிகளில் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தப்படி, நமது நிருபர், கிறிஸ்துவ பக்தர்களுக்குக்கொடுத்த விடை சரியாகவே யிருக்கிறது. மெழுகு வாசனை முதலிய ரசாயனப் பொருள்களால், இறந்த தேகம் இன்றைக்கும் அழிவுறாமல் காக்கப்படலாம். இவ்வித ரசாயனப் பொருள்களைக்கொண்டே, 5,000 வருஷங்களுக்கு முந்தியே ஈஜிப்ட் வாசிகள், தங்களில் மரித்தோர் உடல்களைப், பதம் செய்து வைத்துவந்தனர். சிற்சில வீட்டுப் பிராணிகளையும் (domestic animals) பதம் செய்து வைத்தும் வந்தனர். பிரமிட்ஸ் (Pyramids) என்று வழங்கும் மாபெரும் கோபுரங்களும், இவ்விதமாகப் பதம் செய்த சவங்களின் மேல் கட்டிய கட்டடங்களாகும். இறந்த

அரசர், அரசிகளின் உடலைப் பதம் செய்து, அதனை அடக்கம் பண்ணி அதன் மேல் பெரும் சமாதி கட்டடங்களைக் கட்டுவித்தனர். அவர்களுடன், அவர்கள் அன்புடன் வளர்த்த பூனையையும் பதம்செய்து அடக்கம் செய்துள்ளார். 5,000 வருஷத்திற்கு முந்தி, ஈஜிப்ட்டை அரசாண்ட ராணி உடலுடன், பச்சைக்கிளியையும் பதம் செய்து வைத்துள்ளார். இவை மாதிரியான ஈஜிப்ட் தேசத்திய சமாதிகளைத் தோண்டி எடுத்து, சீமையில் காட்சி சாலையில் (British Museums) வைத்துமிருக்கின்றனர். சென்ற 20 வருஷமாகத் தோண்டி எடுக்கப்பட்ட "துடன்காமன்" என்ற பேர்போன ஈஜிப்ட் அரசனுடைய திரேகத்தை இன்றைக்கும்பார்க்கலாம், இந்த உடலின் காலம், 5,000 வருஷத்திற்குக் குறையாமல் இருக்கும். ஆதலால், 400 வருஷங்களுக்கு முந்தி இறந்த அர்ச். பெரியாரின் பிரேதம், பதம் செய்யப்பட்டு, கெடாமல் இருந்து வருகிறது ஆச்சரியமல்ல! உலகப் பிரசித்தம் பெற்ற நாஸ்திக வாதியான (கடவுள் இல்லை யென்பார்) லெனின் (Lenin) தேகத்தைப் பதப்படுத்தி, கண்காட்சிக்காக, க்ரெம்லின் (Kremlin) கட்டிடத்தில் மாஸ்கோவில் (Moscow)வைக்கப்பட்டுள்ளதென்றால், செத்துப்போனதேகத்தைக்கெடாமல் வைப்பதற்கு, கடவுள் அருள் ஏன் வேண்டும்? 5.000 வருஷங்களுக்கு முந்தி, பூனை, நாய், கிளிப்பிள்ளை முதலிய அற்ப பிராணிகளைப் பதப்படுத்தி வைத்த பயனாக, இன்றைக்கும் அவைகளின் உடல்களை யாதொரு கெடுதியுமின்றி கண்காட்சிசாலைகளில் எடுத்து வைத்திருப்பதென்றால், அர்ச் சாவேரியாருடைய மரித்துப்போன உடல் கெடுதியில்லாமல் இருப்பதற்கு கடவுள் அருளோ, அல்லது மகத்துவமோ அல்லது அபூர்வமோ, ஏன் வேண்டும்? 400 வருஷங்களுக்கு முந்தி இறந்த தேகம் அழியாமல் இருப்பதற்கு கடவுளின் மகத்துவம் வேண்டுமென்றால், 5,000 வருஷங்களுக்கு முன் இறந்த நாய், பூனை, கிளிகளின் தேகம் அழிவுறாமல் இருப்பதற்குக்கடவுளின் அற்புதம் வேண்டாமா? நாய் தேகத்தையும், பூனை உடலையும், இறந்த பிறகு அழியாமல் வைப்பதற்குக் கடவுள் மகத்துவம் வேண்டுமென்று யாராகிலும் சொன்னால் நகைப்புக்கிடமாகும்! அர்ச். சாவேரியார் திரேகத்தை கெடாமல் வைத்திருக்கும் மகிமை, கடவுளால் என்றால், ஏன் நகைப்புக்கிடமிராது? இவ்வித சமாதானம் கொடுத்தால், சிறு பிள்ளைகளும் நகைப்பர்! இவ்வித சமாதானங்கள் (Explanations) மூடபக்தியால் கொடுக்கும் சமாதானங்களே யொழிய விசாரணையால் அல்ல. இன்றைய தினமே கோவாவில் அடக்

கம் செய்துள்ள அர்ச். சாவேரியார் உடலையாகிலும் அல்லது ரோமில் அடக்கம்செய்துள்ளசெயிண்ட் பீட்டர் (St. Peter) உடலையாகிலும், ரசாயன சாஸ்திரிகளைக்கொண்டு, பரீட்சை செய்தால்,பிரக்கியாதி பெற்றுள்ள இந்தஇரண்டுதேகங்களும், பதப்படுத்தப்பட்டிருப்பது நிரூபிக்கப்படும். மூட நம்பிக்கைக ளால் விளையும் கேடுகளுக்கு அளவேயில்லை என்று பல தட வையும் எடுத்துக் காட்டியுள்ளோம். மூட பக்தியை நீக்கு வது அரசாங்கத்தின் முதற்கடமையாகும். போர்த்துகல் (Portugal) அரசும், இததாலி (Italy) அரசும், தங்கள் குடி களின் மூட பக்தியைப் போக்க கடமைப்பட்டுள்ளார். மூட பக்தியால் விளையும் கேடுகளுக்கும், துர்மார்க்கத்தனத்தால் விளையும் கேடுகளுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை என அறிதல வேண்டும். ஒன்றை மாத்திரம் சட்ட திட்டங்களால் நிறுத்தி, மற்றொன்றை விட்டுவிடுவதென்றால், அதைப் போன்ற மதி ஈனம் ஒன்றுமில்லை. மேலிரண்டு பெரியார் களின் மரித்த உடல்களைப் பொதுவாகப் பரிசோதனை செய் யவிட்டு, அத்த தேகங்கள் பதப்படுத்தப்சட்டிருப்பதை யாவ ரும் அறியக்காட்டி மூட மக்களின் அறியாமையை ஏன் போக்கலாகாதென்று கேட்கின்றோம்?

மக்கள் அறியாமையால் விளையும்வினைகளை நன்கு ணர்ந்த ரஷ்ய தேசத்து சோவியட் (Soviet) அரசு, இந்த மாதிரியான காட்சி விஷயங்களில் என்ன செய்கின்றதென்று விசாரிப்போம்.

ரஷ்ய தேசத்தில் சக்ரவர்த்தி ஆளுகையில், ரஷ்ய மக்க ளின் அறியாமை மிகுந்திருந்தது. எவ்வளவோ மூட நம்பிக் கையில் மூழ்கிக்கிடந்தனர்! ஆனால் நமது நாட்டின அறியா மையையும், மூடபக்தியையும்எவ்வுலகிலும்காண்பதரிது. இந்த விஷயத்தில் நமது நாட்டைத் தோற்கடிக்கு நாடு உலகில் எங் குமில்லை என்று சொலலலாம். இது நிற்க, ரஷ்ப தேசததில், சந்து பொந்துகளுக்கு ஒரு மாதா கோவில் இருக்கும். அந்த மாதா கோவில்களில் இறந்த சாமிகளின (Siants) பிரேதங் களை பக்குவப் படுத்தப்பட்டு வைததிருக்கும. அந்தப் பிரே தங்கள், கடவுள் மகிமையால் கெடாமலிருப்பதாக, பல கோடி ரஷ்ய மக்கள், நம்பி வந்தனர். நாஸ்திக ரஷ்யா வந்த பிறகு, இந்த பிரசண்ட மூட பக்தியை (Collossal Ignoronce) நீக்கவேண்டி, சில பரீட்சைகள் செய்து காட்டுகின்றனர். அந்த சாமிகள் பிரேத உடல்களுக்குப் பக்கத்தில், கொலையாளியின்

பிரேத உடலையும், திருடனுடைய பிரேத உடலையும் கொள்ளைக்காரன் பிரேதவுடலையும் அடுத்தாற்போல் வைத்து, இவைகளும் கெடாமல் நாற்றமின்றி இருப்பதைக் காட்டுகின்றார்கள். சாமி உடலும், திருடன் உடலும் கெடாமலிருப்பதைக் கண்ட மூடபக்தர்கள், தெளிவு பெற்று, புனிதர்களாய் தத்தம் நாடுகளுக்குச்சென்று, அங்குள்ள மூட பக்தர்களுக்கும் தெளிவை உண்டாக்குகின்றார்கள். இது வன்றோ அரசியல் நீதி!

நாயுடலையும், நரியுடலையும், திருடர் உடலையும், மகாத்மா (Saints) உடலையும் கெடாமல் இருக்கப் பதப்படுத்தலாம். பட்சி, பறவை , செடி, புல், மரம், எல்லா வஸ்துக்களின் உடல்களையும் பதப்படுத்தி பலகாலம் கெடாமல்வைத்திருக்கலாம். கோடி வருஷத்திற்கு முன் வாழ்ந்து இருந்த வண்டுகள், குங்கிலிய மரத்தில் பதப்பட்டு, யாதொரு உறுப்புகளும் கெடாமல் இன்றைக்கும் பார்க்கலாம். ஆனால் அந்தக்காலத்தில் "கடவுள்" என்ற பெயரையே உலகம் கேட்டறியா? யார் மகத்துவத்தால், அந்த வண்டுகள் 100 லட்சம் வருஷத்திற்கு முந்தி செத்தும், கெடாமலிருந்திருக்கின்றன?

சகலமும் அழிந்து போம்.புழு, பூச்சி உடலானாலும்சரி, மகாத்மா உடலானாலும் சரியே. ஆனால் அந்த அழிவை சிற்சில சிகிச்சையால், சில காலம் தடை செய்யலாம். மரணம் என்பது (Death) இரண்டு வகைத்து. தேக உறுப்புகள் சாவு ஒன்று, தேக முழுமையும் சாவு மற்றொன்று. முதல் சாவை அனுதினமும், நிமிஷத்திற்கு நிமிஷம் பார்க்கலாம். நம்முடைய தோல் உடனுக்குடனே சாகின்றது. ஆனால் தேகமுழுமையும் ஒரே காலத்தில் சாகின்றது. இதற்குக் காரணமென்ன வென்று தெரிதல் வேண்டும். ஒருவன் இறந்தான் என்றால், அவன் உயிர் போயிற்றென்றும், அவன் ஆன்மா நீங்கிற்றென்றும் சாமான்ய மனிதர் சொல்லுவாகள். ஆனால் ஆன்மாவும் போனதுமில்லை உயிரும் போனதுமில்லை. எரிந்த நெருப்பு அவிந்தால், அதிலிருந்து நெருப்பின் ஆன்மாவானது, உயிராவது போனதாகச் சொல்வதில்லை. ஆனால் மனிதன் இறந்தால் மாத்திரம் ஆன்மாவோ உயிரோ போயிற்று என்று பிதற்றுகிறார்கள். இது ஆதாரமற்ற பிதற்றலேயொழிய வேறில்லை. உயிர் போனதுமில்லை, உயிர் வந்ததுமில்லை. பிராணன் போயிற்றென்பதும், பிராணன் வந்ததென்பதும் உலக வழக்கு, வெறுஞ்சொல்லே

யொழிய வேறில்லை. சூரியன் உதயமானால், சூரியன் அஸ்தமித்தான் என்ற உலக வழக்கச் சொற்போன்றதே, உண்மையல்ல உயிர் என்றால் பிராணவாயுவின் சம்பந்தத்தால் சூடு எழுவதே உயிராகும். அதாவது, (Oxidation) உடலில் சூடு உண்டாகும்வரை உயிர் என்று சொல்லவேண்டும். அது நின்றகாலை மரணமென்று கூற வேண்டும். இந்த உஷ்ணம் உண்டாகும்வரை உடல் சீவித்திருக்கும். அதுநின்ற வேளை மரித்துப்போம். ஆனால் இந்த உஷ்ணம் உண்டாவதை சிலகாலம் நிகழவைக்கலாம். இந்தசுடுகை (Oxidation) நிகழும்வரை எந்தக் கிருமியும் நமது தேகத்தைக் கெடுக்க முடியாது. உஷ்ணம் நின்றமாத்திரத்தில் விஷக்கிருமிகள் நமது உடலின் பாகங்களை எதிர்க்க ஆரம்பிக்கும். இந்த எதிர்ப்பால்தான் நமது தேகத்தில் நாற்றமும், அழிவும் நேரிடுகிறது. அக்காலை துர்நாற்றம் வீசும். சதை, துண்டு துண்டாக அற்றுப்போகும். அழுகும் பழம்போல் ஆகும். இது அதிகமாக நிகழாவண்ணம்தான் மரித்தவுடலை புதைத்து விடுகின்றோம். அல்லது எரித்து விடுகின்றோம். ஆனால் இந்தக்கேட்டை எப்படித் தடுக்கலாமென்றால்இறந்த பிறகு நமது உடலை எதிர்க்கும் கிருமிகளை, நெருங்கவொட்டாமல் செய்வதன் மூலமே தடுக்கலாம். மறித்துப்போன திரேகத்தில் விஷக்கிருமிகள் (Microbes) அணுகாதபடி த்குந்த சிகிச்சை செய்தால் மரித்த தேகம் நாற்றமில்லாமலும், அழிவில்லாமலும் சில காலம் இருக்கலாம். இறந்த பிறகு பிரேதத்தை ரசாயனப் பொருள்கலைக் கொண்டு,விஷக் கிருமிகள், தேகத்தைத் துளைக்காமல் இருக்கச் செய்வோமாகில், தேகம் வாடாமலும், வதங்காமலும், இருக்கக்கூடும். இதுதான் பதப்படுத்துவதென்பது. எந்த உடலையும், எந்தப் பொருளையும் பதப்படுத்தலாம். பதப்படுத்திய கருவாடானாலும், துவையலானாலும், மீனானாலும்(Tinned Fish) மாம்சமானாலும் (Tinned Meat) திருடன், கொலையாளி தேகமானாலும், அல்லது மகாத்மா உடலானாலும், எதையும் இறந்த பிறகு அழிவுறாமல் வைக்கலாம். இந்தக் காரியங்கள் யாவும் தெய்வத்தன்மையுமல்ல; தெய்வ காரியமுமல்ல; சாதாரண மனித காரியங்களே. பல மக்களிடத்தும் பரவியுள்ள இவ்வித மூட பக்தியைப் போக்கி தெளிவு பெறுவதற்கு சமயம் அளித்த நமது நந்தம்பாக்கம் நிருபருக்கு ஆசி கூறுகிறோம்.

விஞ்ஞான உலகம்.

பல ஆண்டுகளாக, விஞ்ஞானிகள் சந்திரமண்டலத்துக்கும் நட்சத்திர மண்டலத்துக்கும் தங்களை எடுத்துச் செல்லத்தக்க 'ராக்கெட்' (வாணமொன்றை) கண்டுபிடிப்பதில் சீரிய முயற்சி எடுத்து வந்தனர். ராக்கெட்டின் உதவியைக் கொண்டு சில நிமிடங்களில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தையும் தாண்டிவிடலாமென சில விஞ்ஞானிகள் கருதினார்கள். 35 ஆண்டுகளுக்கு முன் ருஷிய விஞ்ஞானி ஒருவர் ராக்கட்டுகள் சம்பந்தமாக தமது ஆராய்ச்சியை வெளியிட்டார். அவரது கூற்றைக்கேட்ட உலகமக்கள் எள்ளி நகையாடினர். அந்த விஞ்ஞானியின் பெயரையும், அவரது 'ராக்கெட்' ஆராய்ச்சியையும் உலகத்தோர் வெகுவிரைவில் மறந்து போயினர். ஆனால், சமீபகாலத்தில் விஞ்ஞானிகள் உலகில் புதிய 'ராக்கெட்' நிபுணர்கள் தோன்றியிருக்கிறார்கள். தக்க ஆதாரங்களுடன் இவர்கள் தங்களது ஆராய்ச்சி முடிவுகளை நிரூபித்துக்காட்டத் தயாராக இருக்கின்றனர். முன்போல உலகினர் இவர்களையும் துச்சமாக கருதிவிடமுடியாது.

1931-ம் ஆண்டில் ஆஸ்திரிய விஞ்ஞானி ஷிமிடெல் என்பவர், ராக்கெட்டுகளின் மூலமாக தபால் போக்குவரத்துகள் நடத்தலாமென நிரூபித்துக் காட்டினார். தபால்இலாகா அதிகாரிகளும் இவருக்கு ஆதரவளித்து வந்தனர். வெகு தூரங்களுக்கப்பால் அமைந்துள்ள கிராமங்களில் தபால்களை சொற்ப நேரத்தில் கொண்டு சேர்த்துவிடலாமென்பதை பிரத்தியட்சமாகக் காட்டினார். தபால் சேகவன் செய்யும் வேலையை 'ராக்கெட்டுகள்' வெகு விரைவில் திருப்திகரமாகாக செய்து வந்தன. உயிருள்ள பறவைகளும் கூட ராக்கெட்டுகளில் கட்டப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டன. அவைகளுக்கு யாதொருவிதமான இடையூறுகளும் ஏற்படவில்லை. ஆஸ்திரிய விஞ்ஞானியின் பரீட்சார்த்த வேலைகள் திருப்திகரமாக யிருந்ததால், ஜெர்மன் விஞ்ஞானியும், ஹார்ட் மலைப்பிரதேசத்தில் 'ராக்கெட் தபால்' போக்குவரத்தை ஆரம்பித்து நடத்தினார். 'ராக்கெட் சங்கம்' என அமெரிக்காவில் ஓர் சங்கம் இருக்கிறது. இச்சங்கத்தினர் 1933-ம் ஆண்டில் பரீட்சார்த்தமாக ஓர் ராக்கெட்டை உபயோகிக்கத் தீர்மானித்தனர். இந்த ராக்கெட்டில் நெருப்பு பற்றவைக்கப்

பட்ட சில செகண்டுக்குள் ஒரு மணிக்கு 700 மைல் வேகத்தில் அது பிரயாணம் செய்ய ஆரம்பித்தது.

பிரிட்டிஷ் வான சாஸ்திரிகளும் 1933-ம் ஆண்டிலிருந்து ராக்கெட்டுகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

30 ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைமையைப் பார்க்கிலும், இன்று உலகில் ஆகாய விமானங்கள் அடைந்திருக்கும் உன்னதஸ்தானம் குறிப்பிடத்தக்கது. அடுத்து வரும் 30-ஆண்டுகளில் ராக்கெட்டுகள் சம்பந்தமாகவும் அதிசயிக்கத்தக்க பல மாற்றங்கள் ஏற்படுமென ஏன் நாம் கற்பனை செய்துகொள்ளக்கூடாது? எதிர்காலத்தில், மணி ஒன்றுக்கு 25600 மைல வேகம் செல்லும் சக்தியுடைய ராக்கெட்டுகள் ஜெர்மனி, பிரிட்டன் முதலிய தேசங்களில் தற்போது பரீட்சார்த்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தப் பரீட்சைகளில் வெற்றிகண்டால் ராக்கெட்டுகளின் பரிமாணத்தை மாற்றியமைத்து, சாதாரண மனிதனையும் 7-வாரங்களில் செவ்வாய் கிரகத்துக்கும், 4-தினங்களில் சந்திரமண்டலத்துக்கும், 60 செகண்டுகளில் அமெரிக்காவுக்கும் அனுப்பமுடியும் என பிரபல விஞ்ஞானிகள் உறுதியாகக் கூறுகின்றனர்.

ஆனால், ராக்கெட்டில் ஏறிச்செல்லும் பிரயாணி ஒருவரால் அதை செலுத்த முடியுமா? நட்சத்திரங்களும் சந்திரனும் எப்போதும் நகர்ந்துகொண்டே இருக்கின்றன. நாமும் நகர்ந்துகொண்டேதான் இருக்கின்றோம். குறிப்பிட்ட ஸ்தலத்துக்கு ராக்கெட்டை எவ்வாறு செலுத்த முடியும் என சிலர் கேட்கின்றனர்.

இரவு நேரத்திலோ, அல்லது பகலிலோ, குறிப்பிட்ட ஒரு நட்சத்திரம் ஒவ்வொரு செகண்டிலும் எந்த இடத்திலிருக்குமென்பதை வான சாஸ்திரிகள் திட்டமாகக் கூறிவிட முடியும். உதாரணமாக 1938-ம் வருடம் அக்டோபர் 3வ செவ்வாய் கிரகம் எந்த ஸ்தத்தில் இருக்குமென்பதை துள்ளிதமாக அவர்கள் சொல்லிவிடுவார்கள். ராக்கெட்டுகளின் மார்க்கத்தை மாற்றிக்கொள்ளத் தக்கமுறையில் பக்கங்களிலிருந்து சிறு வெடிகளை தீர்த்துக்கொள்ளலாம், அதன்

வேகத்தை குறைக்கவும் வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது பின்னர் குடைகளின் மூலம் பூமியில் இறங்கி விடலாம். ஆனால் இது சாதாரணமான காரியமல்ல. இருந்தபோதிலும் ராக்கெட்டுகள்ன் மூலம் பிரயாணம் செய்யும் காலம் வெகு தூரத்திலில்லை என தோழர் கிளீட்டர் கூறுகிறார். எதிர்காலத்தில் பீரங்கிகள் வாயில் வைக்கப்பட்டு ராக்கெட்டுகள் சுடப்படமாட்டாது. தானாகவே செல்லக்கூடிய சக்தியைப் பெற்றவைகளாக இருக்கும். ராக்கெட் டார்பிடோக்களும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ராக்கெட்டு ஆராய்ச்சிகளின் வெற்றியைக் கருதி பல விஞ்ஞானிகள் உயிரிழந்திருக்கின்றனர். ஆனால் கூடிய விரைவில் விஞ்ஞானிகள் வெற்றி பெறுவார்கள் என நம்ப இடமிருக்கிறது.

பெண் சரீரத்தில் மின்சார உற்பத்தி.

லண்டனிலுள்ள ஒரு யௌவன குலமகள் தான் படுக்கைக்குப் போகையில் ஆடைகளைக்கழற்றும் பொழுது அவள் சரீரத்திலிருந்து மின்பொறிகள் (எலெக்ட்ரிக் ஸ்பார்கிள்ஸ்) வெளியாகின்றனவாம். அதனால் அப்பெண்ணுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறதாம். இந்த சமாச்சாரத்தை "சண்டே எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு எழுதி அம்மாது பரிகாரம் கேட்டாள். ஆடைகளைக் கழற்றும்போது துணியும் தோலும் உரசுவதால் மின்சார உண்டாகிறதென்றும் அதற்கு 'ஸ்டேடிக் எலெக்ட்ரிசிட்டி' என்று பேரென்றும் இனி அவ்வாறு ஆடையை அவிழ்க்கும்போது மெதுவாக அவிழ்க்க வேண்டுமென்றும் "எக்ஸ்பிரஸ்" மூலம் அறிவிக்கப்பட்டாள்.

எலிமிச்சம் பழத்தில் எலக்டிரிக் கரண்டு.

செப்பு- அலுமினியம் தகடுகளை ஒன்றாக ஒரு கம்பியால் இணைத்து, அதை எலுமிச்சம் பழத்தில் அமிழ்த்திப் பரிசோதனை செய்து பார்த்ததில், அரை வால்ட்டுக்கு. 0002அம் பயருள்ள காண்டு உண்டாயிற்றாம். பழத்தின் பருமன் குணம் இவைகளுக்குத் தக்கபடி கரண்டின் சக்தி அதிகரிக்கிறதாம். இரண்டேகால் வால்ட் பல்பு ஒன்று எரியவைக்க 800 எலுமிச்சம் பழங்கள் தேவையாம்.

கருநாக சங்கத்தின் மர்மங்கள்.

இந்நூற்றாண்டில் நடைபெற்ற யுத்தங்கள், பெரும் தலைகீழ் அரசியல் கொந்தளிப்பு இவைகளைக் கொஞ்சம் ஞாபகத்திற்குக் கொண்டுவாருங்கள். ஜப்பான்மிகுந்தகவலை யில் ஆழ்ந்த காலம். ரஷியா கிழைப்பிரதேசத்தில் தனது நாட்டை விஸ்தரிக்க எண்ணி மஞ்சூரியாவில், நுழைந்தது. அங்கிருந்த லி-ஹுங்-சாங் ஜப்பானுக்கு விரோதமாக ரஷியா வுக்கு உதவி கொரியாவுக்கு வழியும் காட்டினார்

இரண்டாம் நிகோலஸ் காலத்தில் டாலன் நதியோரத் தில் இருந்த விலையுயர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளை அப கரிக்கும் ஒரு சங்கம் ரஷியாவில் நிறுவப்பட்டது. ஆரம்ப தசையில் இந்த வியாபாரம் ரஷிய தேசிய கம்பெனி யொன் றுக்கு மாற்றப்பட்டது. அப்பொழுதுதான் ரஷியாவை கொரியாவுக்கு காலடிவைக்க வேண்டாமென்று ஜப்பான் சொன்னது. அதன் விளைவே ரஷியா—ஜப்பான் யுத்த மாகும்.

ஆனால் ஜப்பான் தனக்கு நேரும் கெடுதலை யுணர்ந் தது. ரஷிய ராக்கதர்களை எதிர்க்க வேண்டுமென்று ஜப் பான் நாட்டுப் பற்றுள்ளோர் கிளான்டெஸ்டென் கூட்டங் களில் பேசினார்கள். அந்த சமயந்தான் தேசிய சதியாலோ சனைக்காரர்களான உட்சிடா, டாயாமா இருவரின் பெயரும் உலகம் முழுமையும் பரவியதுடன் 'ஆமூருக்கு அப்பால்' என்ற அர்த்தத்தைத்தரும் கோகுருகை என்ற இரகசிய சங் கத்தை கண்டு பிடித்தவர்கள் இவர்களேயாவர். இந்த சங் கம் ரஷியாவையும், சீனத்தையும் பிரிக்கும் நதியைக் குறித்த சம்பந்த முடையது.

சற்று விளக்கமாகக் கூறின் ஆமூர் நதியின் சீனக்கரை வரை ரஷியா தனது பிரதேசத்தை பரப்புவதை தடுக்கவும் ரஷிய கரைகளிலும் டிரான்ஸ்—பாய்க்காலியாவிலும் ஜப் பான் செல்லவும் ஜப்பான் தேசீய வாதிகள் தீர்மானித்திருக் கிறார்கள்.

டாயமா? ஜப்பான் நாட்டில் நீங்கள் சந்திக்கும் முதல் மனிதனை இப்பேர்க்கொண்டவரைத் தெரியுமாவென்று கேட்டால் அப்பொழுது அப்பெயர் எப்படி தேச மக்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறதென்பதை நீங்கள் காணுவீர்கள். இன்று ஜப்பான் நாட்டு எல்லைக்கு வெளியே டாயமா நன்கு போற்றப்படுகிறார். ஆசிய கண்ட டால்ஸ்டாயைப் போன்று குறுகிய நேத்திரங்கொண்டு நீண்ட தாடியுடைய தொண்டு கிழவனாக அவர் இருப்பதுடன் ரோஜா மலரின் பிரியத்தால் தனது நந்தவனத்தைவிட்டு நகராமல் இருக்கிறார். அத்துடன் நவீன புத்தர் பெருமானாயும் அவர் விளங்குகிறார். இறுதிவரை நின்று பிராணத்தியாகம் செய்யும் 60000 மனிதர்களை டாயமா தன்வசம் வைத்திருக்கிறார். தேசாபிமானம் கொண்ட ஜப்பான் அன்னாரின் பெயராலேயே மட்டும் தேச பிரதிக்ஞை செய்யும். ஆனால் கோகுருகை என்ற அவர் ஸ்தாபித்த சங்கத்தின் வார்த்தையானது "பிளாக் டிரேகன்" அல்லது "கருநாகச் சங்கம்" என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

இக் கருநாகச் சங்கம் சிக்கலான மதச் சடங்குகள் கொண்ட மத ஸ்தாபனமோ அல்லது பொதுவாக ஜப்பான் தேச பட்டாளத்தின் ஒரு ரகசிய இலாக்காவாகவோ இல்லை. மற்றும் வேவு பார்க்கும் ஒரு கூட்டத்தையும் சேர்ந்ததல்ல. இவையெல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமான ஒரு தேசாபிமான சங்கமாக அது மிளிர்கிறது.

இத்தகைய ஒரு உன்னத கட்சியில் அங்கத்தினாகவிருப்போர் தங்களை இன்னாரென பிறர் அறியும் வண்ணம் நடந்துகொள்ள விரும்பார்கள். இச்செய்கை அவர்களின் விவேகத்தையே காட்டுகிறது. நாட்டு நலத்துக்காக இச்சங்கம் சதியாலோசனை செய்தாலும் அவர்கள் காரியங்கள் இத்தகைய ரகசியமான சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டே நடைபெறுகின்றன. இச்சங்கத்தில் உழைக்கும் எந்த ஜப்பானியனும் தனக்கு அவமரியாதை யென்று எண்ணமாட்டான். அதற்கு மாறாக தேர்ந்த அரசியல் அறிவும், ஒழுக்க மேம்பாடும் கற்றுக்கொண்டதற்காக உண்மையில் பெருமைதான் கொள்வான். மூன்று வருடங்களுக்கு முன்னர், ஷாங்கை பத்திரிகை யொன்று மாஜி பிரதம மந்திரி தனதுவாழ்க்கையை மர்மமான சங்கத்திலிருந்து ஆரம்பித்தார் என்று கூறியதால் மிஸ்டர் ஹிரோஹிதாவின் கீர்த்திக்குக்கறை ஏற்படுத்திவிட்டதாக எண்ணிக்கொண்டது. ஆனால் மிஸ்டர் ஹிரோஹிதா

தனது வாழ்க்கைக் குறிப்பில் தான் மாணவராக யிருக்கையில் கருநாகச் சங்கத்தைச் சேர்ந்திருந்ததாக மொழிவிட்டார். 'இகோல் நார்மேல்' அல்லது கேம் பிரிட்ஜிலிருந்து பட்டம் பெற்று வந்ததைப்போன்று ஹிரோஹிதா மந்திரி சபையில் அந்நிய நாட்டு மந்திரியாகவிருந்து தோழர் அரிடா, மாஸ்கோவிலிருக்கும் ஜப்பான் ஸ்தானிகரான தோழர் ஓடா, பெர்லின் ஸ்தானிகன் மௌ.சி சோக்ஸி எல்லோரும் கருநாகச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாகவிருப்பதால் அதை பெரும் பாக்கியமாகவே எண்ணுகிறார்கள்.

மந்திரிகள் மட்டுமா, பெரிய அரசியல் தந்திரிகள், ராணுவத் தலைவர்கள், குருக்கள், பள்ளி மாணவர்கள், ஓவியக்காரன், மாலுமி வணிகள் முதலிய பல படித்தரமான மக்களும் இச்சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இச்சங்க ஏஜண்டுகள் ஜப்பானுக்குச் சொந்தமான இடமெல்லாம் இருக்கிறார்கள். மீசாடோ என்ற இடத்தில் ஆரம்பித்து சகாலினுக்கு தென்பாலுள்ள செப்படவர்கள் வசிக்கும் குடிசை வரையிலும், ஜப்பான் தேசத்து கண் காணா மூலை முடுக்குகளிலும் வியாபித்திருக்கிறார்கள்.

ஐரோப்பாவையே சோர்வுறும்படி செய்த அந்த மகாயுத்தத்திற்குப் பின், இளம் ஜப்பான் ஏகாதிபத்தியம் இனி, தனக்கு நற்காலம் வந்ததாக தீர்மானித்து விட்டது. அதன் பயனாக ஜப்பான் ஏகாதிபத்தியத்தை விஸ்தரிக்கும் எண்ணத்தால் இரண்டு பிரிவுகள் தோன்றலாயின.

சீனத்திலிருந்து ஆரம்பமாகும் ஆசியா கண்டத்தில் நிலப்பரப்பை விஸ்தரிக்கப் பட்டாள உதவி கொண்ட ஒரு கோஷ்டி-ஜப்பானின் முக்கிய பிரச்சனைகள் இந்தோ சைனா சயாம், மலேயா, பிரிட்டிஷ் இந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து முதலிய தென் கடற்பிரதேசங்களை கைப்பற்றுவதில் தான் இருக்கிறது என்று இன்னும் எண்ணிக்கொண்டிருக்கும் ராணுவ தளபதிகள் உதவியிலுள்ள மற்றோர் கோஷ்டி, இந்த இரண்டாவது கோஷ்டியின் எண்ணந்தான் இன்னும் மலைப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்கா பிலிப்பைன் தீவுகளை விட்டுவிட்டு ஹவாயன் தீவுகளில் நாட்டஞ் செலுத்தி யிருக்கிறது. தற்பொழுது கருநாக சங்க முதல் கோஷ்டியின் திட்டத்தைத்தான் ஜப்பான் கைக்கொண்டிருக்கிறது. ஆனால் எப்படியாயினும் பின் கோஷ்டி

எண்ணம் கைவல்யமாகும்படி கடற்படை வலுக்கும் காலமொன்று ஜப்பானுக்கு வந்தே தீரும்.

இத்தகைய தேச பணியைச் செய்யும் இச்சங்கத்தில் செய்யும் முறையும், உண்மைகளும் பொதிந்து கிடக்கின்றன. நவீன உலகில் ஜப்பானின் வேலை இன்னது என்பதை அறியும் விஷய ஞானத்தை இச்சங்கம் கொடுக்கிறது. இத்தகைய பொது தகவல் கொடுக்கும் இலாகா மற்ற நாட்டைப்போலல்ல. அவைகள் தற்காலிக உத்தியோக சிவில் நிலையங்களாகும். ஆனால் கருநாகச் சங்கமோ எந்த மந்திரி சபைக்கும், அரசியல் கட்சிக்கும், கட்டுப்பாடில்லாத சுயேச்சையான ஸ்திர சங்கமாகும்.

ஆசியா மக்களிலே வெள்ளையரை வெறுக்கும் மஞ்சள் நிறத்தவர்களிலே ஜப்பானியர்தான் முக்கியத்வம் வகிக்க வேண்டுவது இயற்கையென்றும் தலைசிறந்ததென்றும் அதை செய்வதே தங்கள் தெய்வீக நோக்கமென்றும் அச்சங்கம் கருதுகிறது

மஞ்சூரியாவை ஜெயித்து அங்கு பொம்மை ராஜியம் ஏற்படுத்தியதும் ஜப்பான் தேசாபிமானிகள் ரஷியாவின் வெளியிடத்தையும் பொதுவாக கைவைப்பான்வேண்டி உள் மங்கோலியாவுக்குள் நுழைந்தார்கள். அதி திறமைசாலியான மங்கோலியா இளவரசர் டிவானுக்கு சிறுமை உண்டாக்கும் எண்ணம்கொண்ட கருநாகச் சங்கத்தின் செய்கை பிள்ளை விளையாட்டேயாகும். எனினும் மூன்று மங்கோலியா சீமான்கள் ஜப்பானை எதிர்த்தார்கள். அடி பணியும்படி சங்கம் அவர்களைக்கேட்டது. 1936 இலையுதிர் காலம் வரை அவர்கள் மறுதளித்து விட்டார்கள். சென்ற செப்டம்பர், அக்டோபரில் இம்மூன்று கலகக்கார இளவரசர்களும் ஒருவர் பின்னொருவர் இறந்து விட்டார்கள். அதன் விபரம் மர்மமாகவே இருக்கிறது. ஒருவேளை விஷமுட்கொண்டதாலோ என சொல்லப்படுகிறது. ஆனால் ஜப்பானியர் நம்புவதுபோல சந்நியாசிகளும், தவசிகளும் இராப்பகலாய் செய்த மந்திர சூனியத்தால் மூவரும் இறந்திருப்பார்கள் என்று ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? ரசாயன சாஸ்திரிகளது விஷத்தைவிட அது அதிக வேலை செய்யும் சக்தி உடையதல்லவா?

ஆனால் கருநாகச் சங்கத்தாருக்கு ஆசியாவில் இம்மாதிரி மாயஜால வித்தைகளின் அனுபோகம் உண்டானால் அதை நவீன முறையில் செய்யும் விதமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

இம்மாதிரி ஜப்பான் ராணுவ நடவடிக்கையில் வடசீனம் மஞ்சூரியா இவைகளின் பிரச்சினைகளை தீர்க்க எண்ணிய பொழுது நமது டயாமாவின் சிஷ்யரான ஜெனரல் டைகாரா என்பவர் அந்த ராணுவத்தின் ஒரு பகுதிக்கு தலைவராக எடுக்கப்பட்டார். அவர் சேனையுடன் சென்ற சில வாரங்களில் மஞ்சூரியா, இரண்டு மங்கோலியா, ரஷியாவின் கீழ் பாகம் இவைகளில் எங்கும் கருநாகச் சங்கத்தின் தங்கள் குழுமி விட்டார்கள். தங்கள் வேலையை தோல்வியடையாத விதமாக இன்னும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சோவியத்தின் உள் பிரதேசங்களிலும் மேல் ஐரோப்பாவிலும் சங்கத்தின் நிர்வாக அதிகாரிகளும் ஏஜண்டுகளும் இருக்கிறார்கள்.

ரஷிய—ஜப்பான் யுத்தத்தில் உருக்கொண்டதே இக் கருநாகச் சங்கம். 1914-ல் அதன் தலைவர்கள், ஜப்பான் ஆங்கிலேயருக்கு வெள்ளைக்கப்பல் படையொன்றைக் கொடுக்கும் வெக்கங்கெட்ட செய்கையை எதிர்த்தார்கள். 19 0-ல் மஞ்சூரியாமீது படையெடுத்தது இச்சங்கத்தின் வேலைதான். 1336-ல் தளபதி ஒகாடா உயிருக்கு ஆபத்துண்டாக்கிய கலகத்தை தூண்டியதும் இச்சங்கமே. வெள்ளையரல்லாத சாதியை தாக்கிய முசோலினிக்கு மரண பயம் ஊட்டியதும் கடைசியாக நீண்டகாள் போர் மூழும்படியாக வட சீனத்தின் மேல் படையெடுக்கும்படி செய்ததும் இக்கருநாகச் சங்கத்தாரே.

(பம்பாய் சென்டினல்)

மின்சாரம்.

மின்சாரம் என்பது இயற்கையின் பரம இரகசியம் பொருந்திய ஒரு சக்தி என்று கூறுதல் பொருந்தும். அதாவது, உஷ்ணம், ஒளி, ஒலி, காந்தம் முதலியவற்றைப் போலவே மின்சாரமானது இயற்கையின் ஒரு பரிபாகமாகும். ஏனெனில் மின்சாரத்தால் உலகில் நடைபெறாத வேலைகளே இல்லை. இது காற்றைப்போலக் கண்ணுக்குத் தெரியாமல் எங்கும் நிறைந்துள்ளது. ஆனால், காற்றை அதன் செயல்களைக் கொண்டு அறிவது போன்று இதனையும் இது செய்யும் வேலைகளைச் கொண்டு அறியலாம்.

மின்சாரத்திற் சூடும், வெளிச்சமும், வேகமும் அடங்கியிருக்கின்றன. இதனைத் தொழில் முறையிற் பயன்படுத்துகையில் அவை வெளிப்படும். இதனை ஒரு வகையிற் பயன்படுத்தினால் இதிலிருந்து சூடும், வேறொரு வகையில் உபயோகித்தால் வேகமும், பிறிதொரு வகையில் உபயோகித்தால் வெளிச்சமும், உண்டாகின்றன. இத்தகைய விநோத சக்தி வாய்ந்த மின்சாரம் இக்காலத்தில் இன்ன வேலைக்குத்தான் பயன்படுகிறதெனக் கூறக்கூடவில்லை. மக்கள் தங்கள் அறிவாற்றலுக்கேற்றவாறு இதனை எண்ணிறந்த தொழில்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். நீராவியால் நடைபெற்றுவந்த வேலைகளிற் பல இப்போது இம்மின்சார சக்தியால் நடந்து வருகின்றன.

மின்சாரம் கூட்டு மின்சாரம் (Positive Electricity) என்றும் கழி மின்சாரம் (Negative Electricity) எனறும் இரு வகைப்படும். இவற்றுள், கூட்டு மின்சாரம் கூட்டு மின்சாரத்தோடும், கழி மின்சாரம் கழி மின்சாரத்தோடும் உறவாடாமல் எதிர்த்துத் தள்ளும். ஆனால் கூட்டுமின்சாரமும் கழி மின்சாரமும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ளுகின்றன. மின்சாரம் ஒரே நிலையில் இருப்பின் தேக்க மின்சாரம் (Static Electricity) என்றும் ஒழுகையில் ஓடும் மின்சாரம் (Current Electricity) என்றும் சொல்லப்படும்.

ஓடும் மின்சாரமே உலகிற் பெரும்பயனளித்து வருகின்றது. இதுதான் செல்லக் கூடிய கம்பிகளை எரித்து உஷ்ணப்படுத்தி

ஒளிரச் செய்யும். இக்குணத்தைக் கொண்டே பெரிய நகரங்களில் வீடுகளிலும், உத்தியோக நிலயங்களிலும் மின்சார விளக்குகள் மிக்க ஒளியோடு பிரகாசிக்கின்றன. இவையன்றிச் சமையல் செய்யவும் மின்சார அடுப்புகள் பயன்படுகின்றன. தண்ணீரில் மின்சாரத்தைசெலுத்தினால் பிராண வாயுவையும் (Oxygen) ஜலவாயுவையும் (Hydrogen) வெவ்வேறாகப் பிரித்துவிடுகிறது. இவ்வாறே பிற உலோகங்களையும் தனித்தனியாகப் பிரிக்கும் வன்மை இதற்குண்டு. ஆனால், இது லாகை, ரப்பர், கந்தகம் எபொனைட்டு என்னும் ஒருவித அரக்கு முதலிய பொருள்களினுட் செல்லியலாது. ஆதலின் மின்சார வேலை செய்பவர் மின்சாரம் தம் உடலுட் செல்லாவண்ணம் கைகளில் ரப்பர் முதலியவற்றாலாய உறை போட்டுக்கொள்வர்.

இம்மின்சாரத்தின் மற்றொரு சிறந்த தன்மை காந்த சக்தியாம். ஓர் இரும்பைச் சுற்றிக் கம்பிகளின் வழியாக வன்மையுள்ள மின்சாரத்தைச் செலுத்தினால் அவ்விரும்பு காந்த சக்தியடைந்து தன்னைப் போன்ற பொருள்களை யிழுக்கின்றது. ஆதலின், ஓடும் மின்சாரம் தன் வழியின் பக்கங்களிலெல்லாம் காந்த சக்தியை உண்டாக்குகின்றதென்னத் தெள்ளிதிற் புலனாகின்றதன்றோ? காந்த சக்தியுடைய பொருள் ஒன்று சுற்றிக்கொண்டே யிருந்தால், மின்சார சக்தியைப் பெறக் கூடுமென மைகேல் பாரடே என்னும் ஆங்கில அறிஞர் கண்டறிந்தார்.

கி. பி 1813-ம் ஆண்டில் சாம்பல் மார்ஸ் என்னும் அமெரிக்கர் மின்சார சக்தியால் ஆயிரமைல்களுக்கப்பால் உள்ளவர்களுக்கும் விரைவில் செய்தி யறிவிக்கக் கூடிய மின்சாரத் தபாலைக் கண்டறிந்தார். இதுவே இப்பொழுது நம் தபாலாபீசுகளில் தந்தியடிக்கும் முறையாகும். செய்தியனுப்பப்படும் இடத்திலும் செய்தியைப் பெறும் இடத்திலும் மேளம் போன்ற இயந்திரம் இரண்டை வைத்து, அவற்றை மின்சாரக் கம்பியால் இணைத்து ஒரு புறத்திலிருக்கும் மேளம் போன்ற இயந்திரத்தில் செய்தியைக் குறிக்கும் அடையாளப்படி தட்டி, அவ்வோசை மின்சாரக் கம்பி வழியாக வெகு விரைவில் மறுபுறத்திலுள்ள இயந்திரத்திற்கு எட்டுமாறு செய்தார். பின்னர், அவை ஓசையின் மூலம் எழுத்துக்களைக் காட்டும் வகையைக் கண்டறிந்தார். மாணவர்களே, தபாலாபீசுக்குச் சென்று தந்தி யடிக்கும் குமாஸ்தாவைக் கவனியுங்கள். அவர் ஒரு கருவியை வைத்துக்கொண்டு 'டச் டக்' என்று தந்தியடிப்பார்.

இவ்வாராய்ச்சிக்குப் பின்னர், கடல் நீரிலும் தந்திக் கம்பிகளைச் செலுத்தி, அவற்றின் வாயிலாக ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் செய்தியனுப்பும் முறை கண்டுபிடிக்கப் பட்டது. செய்திகள் மின்சார வேகத்தால் ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு வெகு விரைவிற் செல்லுகின்றன. டெலிபோன் என்னும் பேசுங் கருவியும் மின்சார சக்தியைக் கொண்டுதான் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் மூலமாக நெடுந் தூரத்தில் உள்ளவர்களும் ஒருவரோடொருவர் பேசும் வசதி கிடைத்துள்ளது.

இவ்வாராய்ச்சிகளுக்குப் பிறகு, மேனாட்டறிஞர் ஒருவர் மின்சாரக் கம்பியின்றியே மின்சாரத்தால் நெடுந்தூரம் செய்தியனுப்பும் கம்பியில்லாத் தந்தி (Wireless) யைக் கண்டு பிடித்தார் இஃது உலக அற்புதங்களில் மிகச் சிறந்ததென்றே கூற வேண்டும். இதனால், இக்காலத்தில் கடலிற் செல்லும் கப்பல்களிலெல்லாம் கம்பியில்லாத் தந்திக்குரிய சாதனங்களமைக்கப் பெற்றுள்ளன. அவற்றைக்கொண்டு நெடுந்தூரத்திலுள்ள கப்பல்களும் ஒன்றோடொன்று செய்திகள் பேசவும், பூமியிலுள்ள தந்தி நிலயங்களோடு செய்திகள் அறிவித்துக்கொள்ளவும் வசதி ஏற்பட்டிருக்கிறது. இவையன்றி, ஆபத்தில் அகப்படும் கப்பல்கள் இக்கம்பியில்லாத் தந்தியின் உதவியைக் கொண்டு வேறு கப்பல்களுக்குத் தமக்கு நேர்ந்துள்ள ஆபத்தையறிவித்து அவற்றின் துணைகொண்டு விபத்தைக் கடக்கின்றன. இக்கம்பியில்லாத் தந்தி கண்டறியப்பட்ட பின்னரே கப்பல்கள் ஆபத்தின்றிக் கடலிற் பிரயாணஞ் செய்கின்றன.

சென்னை, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் டிராம் வண்டிகள், தொடர் வண்டிகள் (Trains,) சில மோட்டார் வண்டிகள் முதலியன மின்சார சக்தியாலேயே இயங்குகின்றன. நிலக்கரியும், நீராவியும் இவற்றிற்குத் தேவையில்லை. நீராவி இயந்திர வண்டிகளை இயக்குவதாலேற்படும் செலவைவிட, மின்சார சக்தியால் இவ்வண்டிகளை இயக்குவதால் குறைந்த செலவே ஏற்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களே, இதுவரையிற் கூறியவற்றைவிட மிகவும் அற்புதமான செய்தியொன்றை இங்கு கூறப்போகிறேன். உண்மையாகவே அஃது உங்களுக்குப் பேராச்சிரியத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமின்று. அஃது, இப்போது கம்பியில்லா மின்சார சக்தி மூலம் கப்பல்களைக் கடலிற் செலுத்தவும், ஆகாய விமானங்களை வானத்திற் பறக்க விடவும் கூடுமெனப் பிரிட்டிஷ்

நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள் என்பதே. யுத்தக் கப்பல்கள் மாலுமிகளின்றியே கருங்கடலில் எத்தகைய விபத்திற்கும் உள்ளாகாது எவ்விடத்திற்கும். மிக வேகமாகச் செல்லுகின்றன. மனிதர் உதவியில்லாமலே இக்கப்பல்கள் யுத்த ஆரம்பத்திற்கு வேண்டிய எல்லா வேலைகளையும் தாமே செய்கின்றன. மனிதர்கள் இருந்து குறிபார்த்துச் சுடுவதைவிட, மிகவும் நேர்மையாய்ப் பீரங்கி வெடிகளைத் தாமே சுடுகின்றன; பீரங்கிகளைத் திருப்பியும், உயர்த்தியும், தாழ்த்தியும் வெடிகிளப்புதற்குத் தக்க நிலையில் தாமே அமைக்கின்றன. இத்தகைய அற்புதச் செயல் ஆகாய விமானங்களாலும் நிகழ்த்தப்படுகிறது. கம்பியில்லா மின்சார சக்தியால் ஓரிடத்திற் சாவதானமாயமர்ந்தவாறே பல ஆகாயக் கப்பல்களையும் ஓட்டலாம்.

மக்களின் அறிவும், ஆராய்ச்சியும் பெருகப் பெருக, மின்சார சக்தியால் உலகில் இன்னும் என்னென்ன அற்புதங்கள் நிகழுமோ, அறிந்தவர் யார்?

கடவுள் உண்டா?

இஸ்லாமிய கலாசாலையைச் சேர்ந்த ஒரு புரோபசர், காந்திஜியிடம் ஒரு கேள்வி கேட்டார். அந்தக்கேள்வி அவரை நெடுநாளாக உபாதித்து வந்தது. இன்றளவும் பலரைப் பல சந்தேகங்களுக்குஉள்ளாக்குவதும் அந்தக் கேள்விதான். அதாவது, கடவுள் உண்டா, இல்லையா? கடவுள் உண்டு எனக் காந்திஜி நம்புவாரேயானால் அவர் நம்பிக்கைக்கு ஆதாரமென்ன? அதுவிஷயமாகக் காந்திஜீயின் அனுபவமென்ன? இதுதான் அந்தப்புரோபஸர் கேட்ட கேள்வி. காந்திஜி இதற்கு என்ன பதிலிறுத்தார் தெரியுமா?

"கடவுள் உண்டு, அல்லது, இல்லையென்று என்னால் தர்க்கிக்க முடியாது. தர்க்கஞ்செய்வதால் பயனுமில்லை. கடவுள் உண்டென்பதை தர்க்கத்தின் மூலம் என்னை நிரூபிக்கும்படி சொல்வீர்களேயானால், அது என்னால் முடியாது. ஆனால், இதுமட்டும் நிச்சயமாகச் சொல்லுவேன். நீங்களும் நானும் இந்த அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவும், உறுதியாகவும் கடவுள் இருக்கிறாரென்று நான் நம்புகிறேன்.

சீன மாதர்கள்.

சீனதேச சரித்திரத்திற்கும், ஏனையதேச சரித்திரத்திற்கும் ஒரு பெரிய வித்தியாசமிருக்கிறது.

அது என்னவெனில், அந்நாட்டு தேச சரித்திரத்தில் நாட்டுக்காக வீரத்தோடு போர் புரிந்த பெண்களின் சரித்திரம் எல்லா காலங்களிலும் நிறைந்திருப்பதேயாகும்.

ஆறாம் நூற்றாண்டில் லியாங் வம்சத்தார் ஆட்சி புரிந்து வந்த நாளில், முலான் என்னும் பெண் சரித்திரப் புகழ்பெற்று விளங்கினாள்.

தனது தந்தைக்கு வேறு ஆண் வாரிசு இல்லாததால் தன்னையே போர் சேவகத்தில் பதிவு செய்து கொண்டாள் என்று பீடிகை போட்டுக் கொண்டு சீனப் பெண்கள் எவ்வளவு தூரம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை விளக்கி மிஸ், எச்க்வி என்பவர் "சைனா போரம்" என்னும் பத்திரிகையில் வரைந்துள்ளார்.

நாம் இருவகையிலும் மகிழ்ச்சியடைய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அதாவது நடந்த நாளில்மட்டும் பெண்கள் அவ்வாறு வீரர்களாக விளங்கினார்கள் என்பதோடு அல்லாமல், இந்நாளிலும் அந்த வீரத்தை இழக்காமல் யுத்தத்தில் முனைந்து நிற்கிறார்கள் என்பதுமேயாகும்.

அந்த நாளில் அவர்களுக்கு இருந்த வசதிகளைவிட இவர்களுக்கு இன்று பல்விதத்திலும் சௌகரியங்கள் இருந்து வருகின்றன.

ஆரம்பப் பாடசாலை முதல், கல்லூரி ஆராய்ச்சிசாலைவரை பெண்களுக்கு யாதொரு தடையுமில்லாமல் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

உத்தியோகம் பார்ப்பதிலும் ஆண்களோடு தங்கள் சக்திக்கும் திறமைக்கும் தகுந்தவாறு எத்தொழிலிலும் ஆண்களோடு போட்டியிடலாம்.

இதனால்தான் இன்றைய பெண்கள் நாட்டுக்கு நாலாத் துறையிலும் சேவை செய்யலாம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

அடிபட்டவர்களுக்கு சிகிச்சை.

ஷாங்கையில் யுத்தம் மிகக்கடுமையாக நடந்துவந்த ஆகஸ்டு மாதத்தில், அடிபட்டு காயமுற்ற போர்சேவகர்களுக்குச்சிகிச்சை செய்ய முன்னணிக்குச் செல்ல ஏராளமான பெண்கள் முன்வந்து விட்டார்கள்.

ஹூனன் மாகாணத்தில் மிஸ் ஸிச் பிங்யூன் என்பவள் ஷாங்கை முன்னணிக்குச் சேவை செய்வதற்காக ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார்.

இரண்டாவது படையைத்திரட்டுவதற்காக அவள் ஹூனனுக்கு வந்தபோது அந்நகரத்திலுள்ள சகல ஸ்தாபனங்களும் அவளை வரவேற்று அவளது முயற்சிக்குப் பெரிய ஆதரவு காட்டின

நர்ஸுகள்.

அடிபட்டவர்களுக்கு உதவி செய்தவர்களில் நர்ஸுகள் சேவை என்றும் மறந்து விடமுடியாது.

ஆசிரியர்கள் தொழிலைவிட நர்ஸு தொழிலைத் தான் உலகிலே எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு இங்கு பெண்கள் கைப்பற்றியிருக்கின்றனர்.

தேசிய நர்ஸுகள் சங்கத்தில் 6-ஆயிரம் தேர்ச்சிபெற்ற நர்ஸுகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களில் மூவாயிரம்பேர் வேலையிலிருக்கின்றனர். சுமார் ஆயிரம்பேர் யுத்த நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

சிலர் ஆஸ்பத்திரிகளிலும், டிரஸ்ஸிங் ஸ்டேஷன்களிலும் உள்ள அடிபட்டிருக்கும் சிப்பாய்களுக்கு உதவி செய்து வருகிறார்கள்.

சீனர் செஞ்சிலுவை சங்கத்தாரின் வேலை யுத்தம் நடக்குமிடத்திற்கு நர்ஸுகளும், ஆர்டர்லிகளும் கொண்ட 20 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தை அனுப்புவதேயாகும்.

கடந்த மூன்று மாதங்களாக யுத்தநிவாரண ஸ்தலமாக ஹூஹன் விளங்குகிறது.

இவ்விடத்திற்கு அடிபட்ட போர்வீரர்கள் அனுப்பப்படுவதோடு சரணமடைகிற பிரஜைகளும் இங்கு வந்து சேர்கிறார்கள்.

இங்கிருந்து யுத்தத்திற்குப்பயந்து ஓடிவந்த சாதாரண மக்கள் அபாய மில்லாமல் வாழக்கூடிய பிரதேசத்தை நோக்கி தெற்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ செல்லுகிறார்கள்.

ஆனால் அதுவரை அவர்கள் இவ்விடத்தைவிட்டு நீங்கும் வரை பாதுகாக்கப்பட வேண்டியது இவர்களுடைய கடமையாகிறது.

வீடில்லாத 250 ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கு வசதியளிக்கவேண்டியிருந்தது. அது சமயம் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை பெண்களே செய்து கொடுத்தனர்.

நகரத்தின் பொதுவேலைகள் எல்லாம் இவர்களாலே கவனிக்கப்பட்டு வருகின்றன.

அநேகமாக ரேடியோ மூலம் பேசுபவர்கள் எல்லாம் பெரும்பாலும் பெண்களே யாவர்.

ரேடியோ ஸ்தாபனத்தின் மத்தியஸ்தலத்தில் இருந்து வேலை பார்ப்பவளும் பெண்ணே.

இதில் என்ன? யுத்தத்திலிறங்கியா வேலை செய்கிறாள் என்று சிலர் வினவக்கூடும்.

உண்மையில் இங்குதான் உயிரைத் திரணமாக மதித்து வேலைசெய்ய வேண்டியிருக்கிறது.

ஏனெனில் எதிரிகள் இந்த ஸ்தாபனத்தின்மீது கண்ணோட்டமாயிருந்து வருகிறார்கள். எந்த நிமிஷத்தில் குண்டு விழுமோ என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறது.

பலதடவை அதைச் சுற்றிலும் விமான குண்டுகள் வீசப்பட்டன. கடைசியில் கட்டிடத்தின் மீதே குண்டுகள் பொழியப் பட்டன.

இன்று சீனாவில் பெண்களிடை தேசிய உணர்ச்சியும், வீரமும் காண்பதற்கு ஜீயாங் கெய்ஷேக்கின் மனைவியே காரணமாகும்.

இவ்வம்மையார் அரசியலில் ஈடுபட்டு எவ்வளவோ சிக்கலான பிரச்சினைகளை எல்லாம் தீர்த்துவைத்திருக்கிறார்.

விமான இலாகாவிற்கு இவர்தான் தலைவராக விளங்குகிறார்.

இவருடைய தலைமையில் தான் தேசியப்பெண்களின் யுத்த சேவை சங்கமும் ஏற்பட்டது.

இதன் கிளைகள் தான் இன்று அத்தேசமெங்கும் பரவி இருக்கிறது.

இந்தச் சங்கங்களின் மூலமாகத் தான் யுத்த அரங்கத்தில் நின்று போர்புரியும் துருப்புகளுக்கு உடை, மிதியடிகள், ஆகாரம், சோப்பு, துவாலைகள், சிகரெட்டுகள் முதலியவைகள் இனாமாக அனுப்பப்பட்டு வருகின்றன.

ஒரு சமயம் மேடம் ஷியாங் யுத்தகளத்தில் போர்செய்து கொண்டிருக்கும் போர்வீரர்களுக்கு தைரிய மூட்டுவதற்காகக் காரில் சென்றுகொண்டிருக்கையில் அடிபட்டுக் கீழே விழுந்தார். மூர்ச்சையற்றுக் கிடந்தார்.

மூர்ச்சை தெளிந்ததும் மீண்டும் தாம் எந்த இடத்திற்குப் போக எண்ணிவந்தாரோ அதே இடத்திற்குப்போக வேண்டுமென்று வற்புறுத்தினார்.

வீடுகளில் தங்கள் குடும்பவேலைகளைப் பார்த்து வருகிறவர்களும், போர்வீரர்களுக்கு உடைகள் தயார்செய்து கொடுத்துத் தங்களது உதவியை வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய துணிமணிகளை இவர்கள் சலவைசெய்தும் கொடுத்துதவுகிறார்கள்.

எவ்வளவுக் கெவ்வளவு தாய்மார்கள் வீட்டில் வேலை செய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு தேசத்திற்கு தொண்டாற்றுகிறவர்களாவார்கள்.

இந்தச் சேவையில் தனவந்தர்களும், ஏழைகளும், ஒப்புள்ளவர்களும், ஒப்பற்றவர்களும் பங்கெடுத்துள்ளனர்.

துரோகிகள் யார்?

நாங்களா? நீங்களா?

(ஆம்பூர் தோழர் கோ. ஜெயராமுலு)

கடவுள் இல்லை என்ற கருத்தைக் கடாவும்போது கதறியெழுந்து கடுஞ்சினத்துடன் கண்கள் பொறிபறக்க, மீசை துடிதுடிக்க, பற்கள் நற நறவென கடித்துக்கொண்டு நம்முடன் நாவாடவரும் நாகரிகமற்ற வைதீக வம்பர்களே, சற்று செவியுடன் மனதையும் தயவு செய்து திருப்புங்கள். பொறுமையுடன் நடுநிலைமை வகித்து நாங்கள் ஏன் கடவுள் இல்லை என்று சொல்லுகின்றோம். எந்தக்கடவுள் இல்லை என்று சொல்லுகின்றோம் "நாங்கள்" என்று தலையங்கத்தில் குறிக்கப்பட்ட பதத்திற்கு பாத்திரமானவர்கள் யார்! அப்பாத்திரங்களுடைய "கடவுள்" எது? அதனை வழிபடும் மார்க்கம் எது அதனால் ஏற்படும் பலன் யாது என்று தெரிந்துகொள்ள விருப்பமுடையவர்கள் பொதுவாக யாங்கள் கூறும் வாதங்களை சற்று பொறுமையுடன் கேட்டு மேற்குறித்து இருக்கும் கோபக்கனலை சாந்தம் என்ற நீரில் அணைத்துக்கொண்டு ஆர அமர்ந்து ஆலோசனை செய்வார்களேயானால் உண்மையாகவே உரைக்கின்றேன் ஒருக்காலும் எங்கள் வாதங்கள் வீண் வாதங்கள் என சொல்ல முன்வர மாட்டார்கள் என்பது என்னுடைய இறுதியான எண்ணம் என்பதை இறுமாப்புடன் எழுதத் துணிகின்றேன்.

நாங்கள் யார்?

நாங்கள் யார் என்றபோதே நீங்கள் சு. ம. காரர்கள் என்றும் ஒழுக்கம் கெட்டவர்கள் என்றும் சமூக துரோகிகள் என்றும் தேசத்துரோகிகள் என்றும் கடவுள் துரோகிகளென்றும் இன்னும் பலவிதமான பழிச்சொற்களுக்கு பாத்திரமாக்கிவிடுகின்றீர்கள். ஆனால் அத்தகைய வசைமொழிகளையும் பூமியைப் போன்று பொறுத்திக்கொண்டு என்ன நினைக்கின்றோம் என்றால் இன்னும் "நம்மை சரியாக தெரிந்துகொள்ள வில்லை" என்பதே. மற்றும் அதற்காக கோபப்படுவதில் பிரயோஜனமில்லை, ஆனால் வருத்தப்படுகின்றோம் என்பதைத் தெரிவிக்

கொண்டு மேலும் சுருக்கமாக அவர்களுக்குச் சமாதானம் தெரிவிக்குமுகத்தான் நாங்கள் எங்கள் அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்யுங்கால் அதனின்று வெளியுண்டாகும் உண்மைகளை கடைப்பிடிப்போர் நாங்கள் என்றும் வாதத்திற்கோ, ஆராய்ச்சிக்கோ, அறிவிற்கோ, ஒவ்வாத வீண்வாதங்கள் கொண்ட பொய்மூட்டைகளை வன்மையுடன் பொசுக்கித்தள்ளபின்னடையோம் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஆங்கிலேய அரசியல் சூட்சிகளில் ஒன்றாகிய (Divide and Rule) என்னும் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கைகொண்டு இந்நாட்டு ஆரியர்களும், கை நகங்களில் மண்படாமல் உண்டு களித்து உறங்க நம் மக்கள் அனைவரையும் கடவுள், மதம், ஜாதி, என்ற பெயர்களைக் கொண்டு முதல் நான்கு ஜாதிகளாக்கி அதனின்று நாலாயிரம் ஜாதிகளாக்கி நமக்குள் நாயும் பூனை போன்று சண்டையிட்டு மண்டை உடைத்துக்கொள்ளவும் அதன் காரணமாக இறந்தால் மூடநம்பிக்கையின் இருப்பிடமாகிய வீர சொர்க்கம் என்ற முக்தியை அடைய ஏதுவாகும் என்ற நம்பிக்கையை ஊட்டத்தக்க நஞ்சு போன்ற நடத்தைகளுக்குக் காரணபூதர்களாக இருக்கும் கடவுள்களோ, மதங்களோ, ஜாதிகளோ நமது வாழ்நாட்களின் சுகத்திற்கு அவசியமில்லை என்றும் அதனால் டங்கம் விளைகிறது என்றும் முடிவாக சொல்லப்போனால் அந்த அர்த்தமற்ற தெய்வாபிமானத்தினால் மனிதாபிமானத்தின் மதிப்பு மங்கிவிடுகிறது என்றும் ஜனசமூகத்தின் ஒற்றுமைக்கே உலை வைத்து வேற்றுமை உண்டாக்குகிறதென்றும், அதனை ஒழிக்குமுகத்தான் அறிவின் ஆராய்ச்சிக்கு ஒத்தவிதமாக ஜன சமூகத்தில் முதன் முதலாக எண்ணும் எண்ணம் விருத்தியான பிறகு தான் சில சுயநலமிகள் தம் வாழ்வின் சுகத்தைக் கோரி "கடவுள்" என்ற கற்பனைப் பெயரை உண்டாக்கி அதனின் மதம், ஜாதி முதலானவைகள் உற்பத்தி செய்து நமது ஒற்றுமைக்கோ, சமாதானத்துக்கோ பங்கம் விளைவிக்கத் தக்க விதமாக நடந்து வருகிறார்கள் என்றும் அத்தகைய கடன்களோ, மதங்களோ, ஜாதிகளோ ஒழித்து சாந்தம், சமாதானம், ஒற்றுமை நிலை நாட்ட நிமிர்ந்து நிற்க முன்வந்துள்ளோர்கள் நாங்கள் என்றால் எவ்வகையில் நாங்கள் பொதுஜன சேவைக்கு லாயக்கற்றவர்களாகி விடுவோம் என்று தான் கேட்கின்றோம்.

நீங்களே

மனித மனதகத்தே எழும்படியான எண்ணங்களை ஜன சமூகத்திற்கு நல்லவிதமாக விருத்தி செய்யாமற் படிக்கு "நமக்கு ஏன் அந்தக் கவலை" "ராமன் ஆண்டாலும் என்ன ஓர் ஜதை

செருப்பு ஆண்டாலும் என்ன" என்ற சுயமரியாதையற்ற தனமாக அவமரியாதையோடு கூடிய ஆட்சியை அமோகமாக புகழ்ந்து பழமையின் வழக்கம் என்ற காரணத்தைக் காட்டி அறிவின் வேகத்தை அடைப்பீர்களேயானால், உங்களைக் கிணற்று தவளைகள் என்று சொல்லாமல் வேறென்ன சொல்லமுடியும்? மேலும் விசால மனப்பான்மையுடன் கூடிய வேலைகட்கு வேலி போன்று முட்டுக்கட்டையாக நின்று மனித முன்னேற்றத்திற்கே உலைவைக்க உறுதியுடன் கூடிய குறுகிய மனப்பான்மை உடையவர்கள் நீங்கள் தான் என்று நாங்கள் நினைத்தால் உங்கள் கூட்டங்களையும் திரும்பிப் பார்க்க எங்கள் உள்ளம் தான் ஒப்புமோ என்பதை நடுநிலைமை வகித்து நீங்களே நினைத்துப் பாருங்கள். ஆனாலும் பொறுமையுடன் சுயநலத்தை விடுத்து அத்தன்மைத்தான் குறுகிய மனப்பான்மை உடையவர்களை நடு நிலைமையில் நிறுத்தி நம் கருத்திற்கு ஒத்தவிதமாக மாற்றி ஓர் அறிவு உலகத்தை சிருஷ்டித்து வருவதனால் அதனாலேற்படும் அழிவு தான் என்ன என்று அறைகூவி அழைக்கின்றோம். எங்களை துரோகிகளென்று கல் நெஞ்சுடன் சொல்லுகிறீர்களே. ஜன சமூகத்தில் எந்தவிதமான துரோகம் செய்தோம். மனித வகுப்பிற்குள், வகுப்புகள் உண்டாக்கி சிறுபான்மையோர் செழித்து வாழப் பெரும்பான்மையோர் பெரிதும் கஷ்டப் பட்டுழைக்க வேண்டும் என்ற அர்த்தத்தைக் கொண்டு வருணாஸ்ரம அதர்ம விதிப்படி பிரம்ம சூத்திரபாகுபாடுகளை செய்தோமா? அல்லது அச்சிறுபான்மையோரின் நலனை உத்தேசித்தும் பெரும்பான்மையோரின் நலனை உதாசீனப் படுத்தி அச்சிறுபான்மையோருக்கு ஒத்தூதவல்ல க்ஷத்திரிய வைசியர்களை சிருஷ்டித்தோமா? அல்லது நாங்கள்தான் பல்லக்குகளில் ஏறவேண்டும் நீங்கள் தான் சுமக்கவேண்டும் என்று ஏமாற்றினோமா? கடவுளுக்கும் எமக்கும் சம்மந்தம் உண்டு. நீங்களும் சம்மந்தம் அடையவேண்டுமானால் எம் மூலம் தான்போக வேண்டும் என்று பொருள் பறித்து காலைக்கும்பிட்டு கால் கழுவிய தண்ணீரை தீர்த்தமென ஏமாற்றி குடிக்கச் சொல்லி தரகு வேலை செய்தோமா? நாங்கள் தான் திருப்பதிக்கு மொட்டையடிக்க வேண்டும் என்று சொல்லி பெரும்பான்மையான ஹிந்து ஜனங்கள் தலைகள் மொட்டையடித்து அழகைக்குறைத்தோமா? இத்தன்மைத்தான நம்பிக்கைகள் ஜனங்களிடையே குறைந்து வரும்போது பகவத் கீதையில் கிருஷ்ணன் சொன்னதாகச் சொல்லி அரசியலில் ஈடுபட்டு அயோக்கியத் தனமாக அனைவரையும் ஏய்த்து அரசியல் அதிகாரம் பெற்றவுடன் அதிகார மமதையால் அளவுக்குமேல்

யங்கு கொண்டோமா? இவையனைத்தும் பேசினால் வகுப்பு வாதிகள் என்று சொன்னோமா? அப்படி இருக்க ஏன் எங்களை வகுப்பு வாதிகள் என்றும், தேசத் துரோகிகளென்றும், சமூகத் துரோகிகளென்றும் சொல்ல வேண்டும்? மேற்குறித்த காரணங்களால் தேசத் துரோகிகள் யார், வகுப்பு துரோகிகள் யார் என்று வாசகர்களே முடிவுகட்டு முகத்தான் ஜாதி மதங்கள் பெயரால் உயர்வு, தாழ்வுகாட்டி உயர்வடைவதும் தேசபக்தி காரணத்தினால் தாங்கள் பெறும் அாசியல் உரிமைகள் பறிகரித்து ஒப்புயர்வற்ற வாழ்க்கை நடாத்தி காட்டுபவர்களோ அல்லது அதற்கு ஒத்து ஊதும் ஓர் பெருங் கூட்டத்தை ஜனசமூக விரோதிகளோ, துரோகியோ அல்லது தேச துரோகியோ என்று சொல்வதல் வேறென்னவென்று சொல்ல முடியும் என்று இங்கு கேட்கின்றேன்?

கடவுள் துரோகி யார்?

உலகமக்கள் பொதுவாக தம் தம் பாஷைகள் விருத்தியின்படி ஓர் வஸ்துவை பல பாஷைகளின் மூலமாக பலபெயர்களால் வழங்கி வருகிறார்கள். உதாரணமாக தமிழ்மொழியில் வழங்கப் படும் தண்ணீருக்கு ஆங்கிலேயர் "Water" என்றும் உருதுவில் 'பானி' என்றும் வடமொழியில் 'தீர்த்தம் என்றும் தெலுங்கில் 'நீளு' என்றும் இன்னும் ஜலம், அக்வா என்ற பலமொழி பெயர்களால் வழங்கப்பட்டு வந்தாலும் பொருள் ஒன்றே என்று பல மொழி அறிந்த அறிவாளிகள் ஒத்துக்கொள்வார்கள். அதைப் போலவே கடவுள் தன்மையும் பல மொழிகளால் பல்விதமாக சொல்லிவந்தாலும் ஓரே அர்த்தத்தை உணர்த்தக் கூடியதாக இருந்தால் இதில் எங்களுக்கு வித்தியாசமான மனப்பான்மை கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் அதற்கு மாறுபட்டவிதமாக "யானையை பரிசோதித்த ஆப்கானிஸ்தானத்து ஆறு குருடர்கள்" கதைபோல் இருப்பதைக் கண்டு தான் எஞ்சி நகையாடுகின்றோம். இதற்கு உதாரணமாக நம் நாட்டை பொறுத்தவரை வரையில் ஆரிய சமாஜத்தார் உட்பட தோழர் காந்தி முதல் சத்தியம் தான் கடவுள் என்றும், ராமலிங்க சுவாமிகள் போன்ற [illegible] அன்புதான் கடவுள் என்றும் இன்னும் பலியை விரும்பும் பத்ரகாளி முதலான முனீஸ்வரன், காட்டேரி தான் கடவுள் என்றும், இன்னும் பற்பலவிதமான செய்கைகளுடன் கூடிய சக்திகளே கடவுள் என்று சொல்லிவந்தாலும் அன்பு என்ற தன்மைக்கும் சத்தியம் என்ற கொள்கைக்கும் பலி என்ற செய்கைக்கும் பொருத்தமாக இருக்கின்றதா என்று பார்க்கும்போது வேறுபட்டு இவையனைத்துக்கும் உயர்ந்தது

என்று இருக்கின்றது என்றபோது அது தான் அறிவு என்று சொல்லுகின்றோம். அதனால் தான் அந்த ஒப்பற்ற வாக்கியத்துடன் கூடிய தன்மையை உலகில் பரப்ப.

"அன்புடைய மாந்தர் அறனெனப் படுவர்
அறிவே எங்கும் அமர்ந்திடும் கடவுள்"

என்று பல வாதங்களும் செய்து வருகின்றோம் என்பதில் எந்த விதத்தில் உங்கள் கொள்கைக்கும் பிறபட்டவர் என்று கடாவுகிறோம். இதன் கருத்து யாதெனில் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் உங்கள் கடவுள்களுக்கு தனியாக பெரிய நிலபரப்புகளுடன் கோவில் கட்ட வேண்டுமேயானாலும் எங்கள் ஒப்பற்ற அறிவு என்ற தன்மைக்கு ஜன சமூகத்திலே அன்பே உருவாக இருக்கக் கூடியவர்கள் இருதயமே அறிவிற்கு இருப்பிடமாகிய கோவில் என்றும் அவ்விடமிருந்து விருத்தியாகும் நல்ல எண்ணங்களோடு கூடிய அறிவே உயர்ந்தது என்று முடிவு கட்டுகிறோம். உங்கள் மதங்கள் கடவுள் என்ற அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டு இருந்தாலும் எங்கள் இயக்கம் அறிவு என்ற அஸ்திவாரத்தில் மேல் கட்டியிருக்கிறது. என்று அறிவின் வேகம் விஞ்ஞானத்தில் முக்கிய பங்கெடுத்து மதங்களின் அஸ்திவாரமாகிய கடவுள் தன்மையை ஓர் உலுக்கு உலுக்கி விரட்டித் துரத்துகின்றதோ அன்று அகத்தியமாக அறிவிக்கின்றேன். அறிவு அற்ற கடவுள் தன்மையும் மதிபற்ற மதங்கள் மோசங்களும் சகிக்க முடியா ஜாதி திமிருகளும் சொல்லாமலே சூரியனைக் கண்ட பனிபோல் பறந்து போகும் என்பது எங்களது இறுதியான முடிவு என்பதை இப்பொழுதே எழுதி வைக்கின்றோம்.

இதனால் தெய்வ பித்து தொண்டவர்கள் அனைவரும் மாண்டுமடிந்துபோகவேண்டியகாலம்வரும்என்று அர்த்தம் அல்ல ஆனால் விஞ்ஞானம் வளர வளர தெய்வாபிமானம் என்ற மனப்பான்மை மனித வாழ்க்கைக்கு உடன் பாடு அல்ல என்று அறிந்து அந்த அர்த்தமற்ற தெய்வாபிமானம் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகி மற்றும் கண்ணுக்கும் காணப் படாதது போல் ஆகிவிடும் என்பது இங்கு எமது கருத்து. இதையே அனேக அறிஞர்களும் அறிவித்து இருந்த போதிலும், குறிப்பாக விஞ்ஞானத்தில் விசேஷ ஞானம் பெற்ற தோழர் (Sir) சர். சி. பி. ராமசாமி (ஐயர்) அவர்கள் பம்பாயில் நடந்தேறிய அகில இந்திய விஞ்ஞான மகாநாட்டில் உலக நடவடிக்கைக்கும் தெய்வீகத்திற்கும் கிஞ்சித்தும் சம்மந்தம் இல்லை என்றும் உலகில் உள்ள சிறு

அணுக்கள் முதற்கொண்டு பிரபஞ்சம் முழுவதற்கும் ஆக்கல் அளித்தல் அழித்தல் என்ற மூன்று செயல்களுக்கும் கடவுள் ஒருவர் இருக்கவேண்டிய அவசியமில்லை என்றும் சொல்லிவிட்டோது உங்கள் புலன்களுக்கோ அறிவுக்கோ அவர் நாஸ்திகராக தென்படாததுதான் உங்கள் வஞ்சகத்தோடு கூடிய அறியாமையை அறிய சந்தர்ப்பப்படுகிறது. என்னே உங்கள் வஞ்சகம்!

வழிபாடு.

நீங்கள் மேற்குறித்த பற்பலவிதமான பெயர்களோடுகூடிய கடவுள்களின் சாந்திக்காகவோ அல்லது அவைகளுக்கு உங்கள் நன்றியறிதலை தெரிவிக்குமுகத்தான் பற்பலவிதமான வழிபாடுகள் செய்து வருகின்றீர்கள். அதில் சில இங்கு குறிப்பிடுகின்றோம்.

1 ஹிந்து சமூகத்திலே பரதேசி, சாமான்களை பார்க்கவும் கூடாது; தொடவும் கூடாது என்ற இன்றைய கொள்கையிலே சுதேச சாமிகள் என்று சொல்லக்கூடிய சொக்கநாதர் முதல் சொல்லின் சத்தியம் தான் கடவுள் என்ற காந்திவரைக்கும் தூபதீப நைவேத்தியங்கள் செய்து பரதேசி கற்பூரமாகிய ஜப்பான் கற்பூரத்தை கொளுத்தி பூசையாக்கி பகவான்பேரினால் படைத்ததை பட்டானுக்கு பார்சல் செய்வதும் ஓர் உலகமறிந்த வழிபாடு. இதுவுமன்றி மல்லி முல்லை இருவாக்ஷி ஜாதி சம்பங்கி போன்ற நல்வாசனையுள்ள புஷ்ப தினுசுகளை புஷ்பபல்லக்குகள் என்ற பேரில் ஜனங்களுக்கு உபயோகப்படாமற்படிக்கு உதாசீனப்படுத்தி வருவது மற்றொரு வழிபாடு. ஒத்தை பிரகாரங்களுடன் ஒன்றுக்குமேல் மதில்கள் ஏற்றிய கோவில்கள் கட்டி பட்டு பீதாம்பரங்களுடனும் வைர அங்கிகளுடனும் செம்பு பதக்கங்களுடனும் வைடூரிய புஷ்பராக கோமேதகங்களுடனும் விக்ரகங்களை அலங்கரித்து ஊஞ்சல் பல்லக்குகள் நடத்துவது ஓர் ஒப்பற்ற வழிபாடு என்றும், ஓர் நாளைக்கு இத்தனைமுறை திருமஞ்சனம் செய்யவேண்டும் என்று கூடைக்கணக்கான பழங்களுடன் குடக்கணக்கான பாலும் மோரும் தயிரும் தேனும் கொண்டு விக்கிரகத்தின் உச்சியில் ஊற்றி அதனை கீழேவிழுந்ததை வழித்து வழங்குவதும் ஓர் வழிபாடு என்றும் மற்றும் மரக்கால் கணக்கில் புளியோதரை, பொங்கல் ததியன்னம் வடை தோசை முதல் சுண்டல் செய்து விக்ரகத்துக்காட்டி வந்திருந்தோருக்குச் சிறிது கொடுத்து பெரிது ஓர் சிறு சமூகத்தார் தொந்தி வயிறு தள்ள உண்ணுவதும் ஓர் வழிபாடு. இன்னும் சீர்திருத்தக்காரர் என்று சொல்லிக்கொள்ளும் ஆரிய சமாஜத்தார் ஆற்றி

வரும் அருமையான நெய்யை வந்திருப்போர் நெஞ்சுருகுமாறு புகைப்பதும் புதுமையான வழிபாடு. இதுமாத்திரமல்ல இதைவிட படுமோசமாக வீட்டிலிருக்கும் அன்பின் உருவங்களாகிய குழந்தைகளையும் ஆடு, பன்றி சேவல் எருமை முதல் ஈ. றாக வுள்ள ஒணான் வரைக்கும் ஈட்டிகொண்டும் கத்திகொண்டும் இரக்கமின்றி கும்பகோணத்து யாகம் போன்ற சித்திரவதை செய்வதும் ஓர் வழிபாடு என்றும் கருதப்பட்டு வருகின்றது.

ஆனால் நாங்களோ இத்தகைய வழிபாட்டுகளைக்கண்டு எவ்விதமாக மதிக்கின்றோம என்றால் ஆழ்ந்த சிந்தனையுடனும் கோபமின்றி வருத்தத்துடனும் என்ன செய்கின்றோம் என்றால் இந்த அறிவற்ற சமூகம் என்று அறிவுடைமையாகும் என்றும், எண்ணையின்றி ஈரும் பேனுடன் எறஇறங்க பார்த்துக்கொண்டும படுக்க பாயுமின்றி உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி, நிற்க நிழலின்றி, உழைக்க உழைப்பின்றி ஊமையும் குருடனும் போல் கல்வியின்றி கஷ்டப்படும் மக்கள் கோடிக் கணக்காக இருக்க கற்பூரத்தாலும், நெய்யினாலும், புஷ்பப் பல்லக்குகளாலும் சூரை பூசனி தேங்காய்களாலும் தேர் திருவிழாக்களாலும், வாணவேடிக்கைகளாலும் மாதக்கணக்கான உற்சவங்களாலும் யாத்திரைகளாலும் நெற்றி வேர்வை நிலத்தில் சொட்ட சம்பாதிக்கும் செல்வத்தை வீண் விரயம்செய்வது அறிவற்ற செயலாகும் என்றும், அத்தகைய பணங்களை பொது நிதிகளாக்கி மேற்குறித்த இக்கற்ற ஜனங்களுக்கு உழைப்பற்றவருக்கு உழைப்பு கொடுக்கும் தொழிற்சாலைகள் பல உண்டாக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் முகத்தான் ஒவ்வொருவரும் வாழ்நாளுக்கு வேண்டியதை அடையமுடியும் என்றும் அத்தகைய சீர்திருத்தச் செயல்களுக்கு ஏற்ற ஆழ்ந்த ஆராய்ச்சியே உங்கள் கடவுள்களைவிட மேலானது என்று முன்பே தெரிவித்த "அறிவு"க்கு யாங்கள் செலுத்தும் வழிபாடு என்றும் அதனா லேற்படும் பொதுஜன சவ்கர்யமே அவ்வழிபாட்டின் பயன் என்றும் தெரிவித்துக்கொண்டு பனங்காயை எடுத்து குருவி தலையின்மேல் வைத்தபடி தொழுகப் பெறும் "மூஷிகவாஹனன்" என்று சொல்லக்கூடிய விநாயகனைப்பற்றியோ கருடவாஹனமாக கொண்ட விஷ்ணுவோ, ஜகன் நாதத்தில் மகளைப் புணர்ந்தால் தோஷமில்லை என்று சொல்லத்தக்க "சர்வம் ஜகன்னாதம்" என்ற ஒழுக்கமற்ற செயல்களும், தாயைப் போன்ற தாரம் வேண்டும் என்றுகேட்ட விநாயகனை நடுத் தெருவில் குந்தவைப்பதும், கோவில்களில் கடவுள் தாசிவீட்டுக்கு

சென்ற மாதிரியாகவும்,பகவத் கைங்கர்யத்தில் மனைவியை விற்றாலும் பாதகமில்லை தோஷமில்லை என்று சொல்லத்தக்க கபீர்தாஸ் கதைகளையும் இன்னும் ஒழுக்கம் கெட்ட கதைகளையும் செயல்களையும் ஒத்துக்கொண்டு அத்தகைய ஒழுக்கங்கெட்ட செயல்களையே மனமுவந்து புகழ்ந்து கொண்டு எங்கள் கடவுள் இத்தகைய ஒழுக்கங்கெட்ட செயல்கள் செய்யமாட்டார் அப்படி செய்திருந்தால் அவர் கடவுளல்ல; சாதாரணமான ஒழுக்கங்கெட்ட மனிதன் என்று சொன்னால் எங்களை கடவுள் துரோகிஎன்று சொல்லுவதில் எந்தவிதத்தில் நாங்கள் ஒப்புக்கொள்ளக்கூடும் என்றும் இத்தகைய செயல்களுக்கு தப்ப பகட்டி புது வியாக்கியானங்கள் புதுப்பித்துக்கொண்டு பொதுஜனங்களை ஏமாற்றி வருவது கடவுள் துரோகிகள் அல்லவா? மேற் தெரிவித்தபிரகாரம் தேசியப் போர்வையால் சிறு சமூகத்தின் நலனுக்காக பெரும் சமூகங்களை நசுக்குவதும், பெருமிதமான ஏழைகளால் சம்பாதிக்கப்பட்ட பணத்தை ஏழைகளுக்கு உதவாமற்படிக்கு வீண் விரயம் செய்வதுமான சமூக துரோகிகள் யாரென்றும் ஒழுக்கமற்ற காரியங்கள் கடவுள் பேரில் எழுதி அசற்த லீலைகள் என்றும், திருவிளையாடல்கள் என்றும் ஏமாற்றி வருபவர்கள் எந்த துரோகிகள் என்றும் இதை ஊன்றி வாசிக்கும் ஒவ்வொர் வாசகரும் தம் தம் பகுத்தறிவுடன் சிந்தித்து ஓர் ஒப்பற்ற முடிவுக்கு வருவார்களென்ற நம்பிக்கையுடன் இந்த வியாசத்தின் தலையங்கத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் தாங்களே தெரிந்து கொள்வீர்களென்று இச்சிறு கட்டுரையை இத்துடன் இறுத்துகின்றேன்.

“அறிவே சிறந்து அனைத்தும் மறந்து
உறவே கொண்டு உழைப்பீர் தோழரே”

வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத நாடு.

பிரான்சின் எல்லையிலுள்ள சிறு சுயேச்சை நாடான லக்சம்பர்க் தேசத்தில் வசிக்கும் 2,64,000 பிரஜைகளில் ஒருவருக்குத்தான் வேலையில்லையாம். உலகில் வேறு எங்கும் வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமை தலைவிரித்தாடும் போது இச்செய்தி ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

தாவரங்களில் மின்சாரம்.

தொட்டாற் சிணுங்கி.

கங்கை நதி தீரத்தில் தந்திச் செடியென்றொரு செடி வகை இருக்கிறது. அச் செடியின் இலைகள் எப்போதும் அசைந்து கொண்டேயிருக்கின்றன. அப்படி அசைவது இருதயம் துடிப்பதுபோல் காணப்படுகிறது. அச் செடியினருகே சென்று ஒருவர் உரக்கப் பேசினால் அச் செடி ஒரு கடிகாரத்தில் பெண்டுலம் அசைவதுபோல அசைகிறதாம். அதுவும் கோடை காலத்தில் இப்படி அசைவது அதிகமாயிருக்கிறதாம்.

இரவு வந்ததும் அச்செடியே வேறு விதமாக மாறிவிடுகிறது. இலைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்கின்றன. பகலெல்லாம் உழைத்துவிட்டு இரவில் அயர்ந்து நித்திரை செய்வதுபோல் அச் செடி காணப்படுகிறது. இதுபோன்று தாவர உலகில் வேறு பல செடிகளும் இருக்கின்றன. "தொட்டாற் சிணுங்கி" என்ற ஒரு செடியைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். மனிதனோ, அல்லது மிருகங்களோ அச்செடியைத் தொட்டு விட்டால்போதும்! உடனே இலைகளெல்லாம் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும். செடியே நடுங்கி ஒடுங்குவதுபோல் காணப்படும்.

மின்சாரச்சுழற்சி.

காலஞ் சென்ற இந்தியாவின் ஒப்பற்ற தாவரநூல் வல்லுநரான சர் ஜகதீசசந்திரபோஸின் வாழ்க்கை இவை போன்ற தாவரங்களின் ஆச்சரியகரமான சம்பவங்களை ஆராய்ச்சி செய்வதிலேயே கழிந்தது. மிக நுட்பமான கருவிகளைக் கொண்டு அவர் ஆராய்ச்சிசெய்து மின்சாரச் சுழற்சி போன்று ஒவ்வொரு செடியிலும் சுழற்சிகள் இருக்கின்றன வென்று கண்டு பிடித்தார். இவ்வாறான ஆராய்ச்சிக்கு அவர் இருவித கருவிகளையே உபயோகித்தார். ஒன்று மின்சாரச்சுழற்சி; மற்றொன்று மின்சார ஓட்டத்தை நுட்பமாகக் காட்டும் நுண்ணிய கருவி.

அவர்கண்ட உண்மைகளைக் கீழ்க் கண்டவாறு சுருக்கமாகக் கூறலாம். செடியின் எப்பாகமாயினும் நாசமாக்கப்பட்டால் அப்பாகத்திலிருந்து ஒருவித மின்சார சக்தி செடி முழுவதும் பரவுகிறது. ஒவ்வொரு செடியிலும் ஏதாயினுமொருபாகம் அசைக்கப் பட்டால் அவ்வசையும் செடி முழுவதும் பரவுகிறது.

மிருக குணங்கள்.

கத்திவெட்டு, விஷமூட்டல் முதலியவைகளால் மிருகங்கள் எவ்வாறு கஷ்டப்படுகின்றனவோ அப்படியே செடி கொடிகளும் இவைகளால் கஷ்டப்படுகின்றன. ஆர்சனிக் விஷத்தால் மனிதன் கஷ்டப்படுவது போலவே செடிகளும் அவ்விஷத்தால் கஷ்டப்படுகின்றன. அவ்விஷத்தை ஊட்டியே செடிகளைக் கொன்று விடலாம். விஷத்தின் அளவு சிறிதாகவிருந்தால் செடி நடுநடுங்கிப் போகிறது.

உலோகங்களுக்கு உயிர்.

உயிரற்றனவும், வளர்ச்சியில்லாதனவுமாக நாம் கருதும் உலோகப் பொருள்களிலும், மிருகங்களுக்கும் மனிதனுக்கும் உள்ளது போன்ற உணர்ச்சிகள் இருப்பனவாக போஸ் கண்டு பிடித்தார். மின்சார ஓட்டம் எவ்வாறு உண்டாகிறது? மனிதன், மிருகம், செடி, உலோகம் என்ற வித்தியாசம் வேண்டுவதில்லை அணுக்கள் இடம் விட்டு இடம் மாறும்போது மின்சார ஓட்டம் உண்டாகிறது.

போஸின் ஆராய்ச்சியில் ஒவ்வொரு செடியும் வெளியிலிருந்து உண்டாகும் அசைவில் வெவ்வேறு அளவோடு அசைகின்றனவென்பது கண்டு பிடிக்கப் பட்டது. இப்படிப் பட்ட சிறந்த நிபுணர் இவ்வுலகத்தினின்றும் மறைந்தார்.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7	,, அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் நான்காம்பதிப்பு200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22.	ஈ. வெ.ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிடஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	நரகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35	[illegible]வைக்கியானம் அல்லது கைவல்யம்கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)○(—

தோழர் ஈ. வே. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon பேர்ட்ரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0
கடவுள் ... ... ,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0
வால்ட்டேர் ... ... ,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு ... ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மேக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0
2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0
2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

தமிழ்த்தாய்மீது ஆச்சாரியார் ஹிந்திக் கத்திவீச்சு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the
Unmai vilakam Press, Erode